# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 42-ம் இலக்கம்


# 'முப்பது வெள்ளி'க் காசைப்

## போலாந்து மேற்றிராணிமார் பரிகசித்தனர்

பள்ளிக்கூடங்களில் ஞானோபதேசம் படிப்பிப்பதைத் தடைசெய்யும் நோக்கத்துடன் போலிஷ் அரசாங்கம் ஏற்படுத்திய சட்டத்தை அத்தேச ஞானாதிகாரிகள் எதிர்த்ததுமல்லாமல், அரசாங்கமளிக்கவிருக்கும் "முப்பது வெள்ளி"யையும்பற்றிப் பரிகசித்துக் கூறியிருக்கிறார்கள். ஞான உபதேசக் கல்வி பள்ளிக்கூட நேரத்தைத் தவிர்ந்த வேளைகளிலேயே கற்பிக்கமுடியும் எனவும், குருமார்உட்பட ஞானஉபதேசங் கற்பிப்போர் யாவரும் கல்விஇலாகாவில் பெயர் பதிய வேண்டும் எனவும், அவர்களுக்கு மாதம் 17 பவுண் சம்பளம் அரசாங்கம் கொடுக்குமெனவும் அறிவிக்கப்பட்டது. சந்நியாசசபையினர் ஞான உபதேசங் கற்பிப்பது விலக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது "குருமாரைக் காசுக்கு வாங்க முடியாது" எனத் தெளிவாய்க் கூறியிருக்கின்றனர் மேற்றிராணிமார். மேலும் அவர்கள் விடுத்த நிருபத்தில், "போலாந்திலுள்ள ஒவ்வொரு கத்தோலிக்க இல்லமும் கிறீஸ்துவின் உண்மையைப் போதிக்கும் பாடசாலையாய் ஆகும்படி பெற்றோரையும் பிள்ளைகளையும் கேட்டிருக்கிறார்கள்.

**சம்பளம் வேண்டாம் :**

சென்றஆடிமாதம் அரசாங்கம் கட்டளைவிதித்துப் பள்ளிக்கூடங்களில் ஞானோபதேசம் படிப்பிப்பதைத் தடைசெய்தது. வேதம் கற்பிப்பவர் அரசாங்கத்தின் அங்கீகாரம்பெறவேண்டும்என்ற கட்டளையை மறுத்துப் போலாந்தின் ஞானத்தலைவர் கருதினால் விசின்ஸ்கி அறிக்கை விடுத்திருந்தார். இவரும், 50 மேற்றிராணிமாரும் கைச்சாத்திட்டு விடுத்த நிருபத்திலே கூறுவதாவது: "குருமார் தங்கள் பங்கு விசாரணைக் கடமையில் ஞானோபதேசம்படிப்பிக்கும் கடமையை நிறைவேற்றுவதற்காகச் சம்பளம்பெறவிரும்பவில்லை. அரசாங்க பாடசாலைகளில் ஞானோபதேசம் படிப்பிப்பது தடைசெய்யப் பட்டதிலிருந்து அவர்கள் அரசாங்கத்துடன் ஒப்பந்தஞ்செய்துகொண்ட ஆசிரியர் என்ற நிலைமையை இழந்துவிட்டார்கள். இனிமேல் அவர்கள் தங்கள் குருத்துவ கடமைகளை நிறைவேற்றுகிறவர்களாய் மாத்திரமிருப்பர்."

போலாந்து ஜனாதிபத்தியசட்டமும், திருச்சபை - அரசாங்க ஒப்பந்தமும் பிள்ளைகளுக்கு ஞானோபதேசக் கல்வியூட்டுவது பற்றிப் பெற்றோருக்குச் சுதந்திரமளிக்கிறது. "திருச்சபை தனது ஞானவிசாரணைக்கடமையையும், வேதம் படிப்பிக்குங் கடமையையும்நிறைவேற்ற"ப் பூரணஉரிமை கொடுக்கிறதாக ஒப்பந்தம் கூறுகிறது.

**பெற்றோரின் உரிமை :**

போலாந்தின் பள்ளிக்கூடங்கள் மதச்சார்பற்றவையாக வேண்டுமென்று கடந்த ஆடியில் ஏற்பட்ட பாராளுமன்றச்சட்டம் கூறுவதால், குருமாரும், ஞான உபதேசம் கற்பிக்கும் இல்லற ஆசிரியரும் இனிமேல் அரசாங்க ஊழியரல்லவென்றாகிறது. எமது பாராளுமன்றத்தின் இப் புதிய போக்குப் பெற்றோருடையவும், பொதுமக்களுடையவும் உரிமைகளுக்கு வரம்புபோட முடியாதென்பதை நாம் தெளிவாய்க்கூற விரும்புகிறோம். அதாவது, மத சுதந்திரத்தையும், பெற்றோர் தம் பிள்ளைகளை எக் கொள்கைப்படி வளர்க்கவேண்டுமென்ற உரிமையையும், திருச்சபை தனது ஞான விசாரணைச் சேவையையும், வேதக் கல்வி கற்பிக்கக் கொண்டுள்ள உரிமையையும் சட்டத்தினால் கட்டுப்படுத்த முடியாது.

**சிறுவர்களுக்கு :**

எனவே, இந்தஅழிக்கமுடியாத உரிமைகளின் அடிப்படையில் பள்ளிக்கூட நேரத்துக்குப் புறம்பே நாம் திருச்சபையின் ஆன்ம விசாரணைச் சேவையையும், ஞானோபதேசப் போதகச்சேவையையும் தொடர்ந்து நடத்துவோம். பிள்ளைகளை விழித்து மேற்றிராணிமார் கூறியதாவது: "அதிக கஷ்டங்களிடையில் நீங்கள் கடவுளைத் தேடவும், அறியவும் வேண்டும்; ஞானஸ்நானம் பெற்ற தமது மக்களைப் பள்ளிக்கூடத்திற் சந்திக்கக் கிறீஸ்துநாதருக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அவரை எங்கு காணலாமோ அங்கு ஓடிச்சென்று அவரைச் சந்தியுங்கள்."

ஜஸ்னகோற்வில் உள்ள செஸ்ரோசோவ சந்நியாச மடத்திற் கூடிய மேற்றிராணிமார் சங்கத்தில் இந்த நிருபம் புரட்டாசி மாதம் தயாரிக்கப்பட்டது. இதனால் மக்களிடையில் ஏற்படக்கூடியஆத்திரத்தை யூகித்தறிந்து பொதுவுடைமை அதிகாரிகள் இதைப் பிரசித்தமாய் வாசிப்பதைத் தடைசெய்தனர்.

### 50 மொழிகளில் அன்னையின் செபமாலை

நிகழ்மதி 8-ம் நாள் ஞாயிறு மாலை வத்திக்கான் வானொலியில் 50 மொழிகளில் செபமாலைசொல்லப்பட்டது. இத்தாலியிலுள்ள அன்னையின் ஐந்து ஆலயங்களினின்று இவ்வானொலி அஞ்சலி செய்யப்பட்டது. இவ்வாலயங்கள் : 'பொம்பேயி', 'சிராக்யூஸ்', 'ஒரோபா', 'லொரெட்டோ', ரோமையிலுள்ள அன்னையின் பெரும் ஆலயம். ஒவ்வொரு ஆலயத்திலும் மக்கள் பெருங் கூட்டமாகக்கூடி, வரும் பொதுச்சங்கத்திற்காகவும், உலக சமாதானத்திற்காகவும் மன்றாடினர்.

### தந்தையின்விழாவும் இந்தியஅரசும்

பரிசுத்ததந்தையின் பிறந்ததின விழா வருகிற கார்த்திகைமாதம் 5-ம் நாள் ரோமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கின்றது. இவ்வின்பநாளின் சிறப்பில் கலந்துகொள்ள இந்திய அரசு தூது ஒன்றை அனுப்ப எண்ணியுள்ளது.

### கருதினால் அகாஜியானியன் குணம் பெற்றார்

கடந்தசிலவாரங்களாக ரோமையில் வியாதியுற்றிருந்த மேன்மைதங்கிய கருதினால் அகாஜியானியன் ஆண்டகை முழுக் குணம்பெற்று, மருத்துவ நிலையத்தை விட்டு வெளியேறினார். விரைவில் தம் பதவியின் கடமைகளை நிறைவேற்றத் தொடங்குவார். இவர் வேதபோதக நாடுகளைக் கண்காணிக்கும் கருதினால் ஆண்டகை.

### பயனற்றவை அகற்றப்படும்

கிறிஸ்துவ ஒற்றுமையை முன்னிட்டு, இன்று திருச்சபையில் பழமையடைந்து பயனற்றுப் போன அம்சங்கள் அனைத்தையும் கத்தோலிக்கதிருச்சபை தைரியத்துடன் அகற்றிவிடும் என்று மேன்மைதங்கிய கருதினால் பெயாஆண்டகை கூறினார். கருதினால் பெயாஆண்டகை, வரும் பொதுச்சங்கத்தில் கிறிஸ்துவ ஒற்றுமைக்காகத் தயார்செய்ய ஏற்படுத்தப்பெற்றிருக்கும் செயலகத்தின் தலைவர். கிறிஸ்துவ ஒற்றுமையைக் குறித்துப் பேசி, அண்மையில் சுவிற்சர்லாந்தில் சுற்றுப்பிரயாணம் செய்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

# புதிய கருதினால்கள்

வரும் மார்கழிமாதம் 11ஆம் நாள் பத்துப்புதிய கர்தினால் ஆண்டகைகளை நியமிக்க இரகசியக்கூட்டம்ஒன்று கூட்டப்பெறும் எனும்வதந்தி விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுமெனத் தெரியவருகின்றது. இன்னும் ஒரு கர்தினால் ஆண்டகையைக்கூடப் பெற்றில்லாத நாடுகளுக்கும், கர்தினால்மாரை இழந்தநாடுகளுக்குமே முதல்வாய்ப்பு அளிக்கப் பரிசுத்த தந்தை விரும்புவதாகத் தெரியவருகின்றது. எதிர்பார்க்கப் படுபவர்கள் :

தூலுஸ்நகரின் கர்ரோண் ஆண்டகை (பிரான்ஸ்)

கொழும்புநகரின் கூரே ஆண்டகை (இலங்கை)

வாஷிங்ரன் நகரின் ஓபொய்ல் ஆண்டகை, (வடஅமெரிக்கா).

மற்றநாடுகள்: சிலி, ஆர்ஜென்ரீனா, பெரூ.

வத்திக்கான் அரண்மனையிலுள்ள அலுவலர்களுள் சிலஆண்டகைகளும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

கூஸ்ஸா ஆண்டகை

தாங்தே ஆண்டகை

டி விஞ்ஞாலெ ஆண்டகை

இம்மூவருள் கீழேகூறிய இருவரும் மேற்றிராணித்துவ அபிஷேகம் பெறாதவர்கள்.

மேற்றிராணித்துவ அபிஷேகம் பெறாத இன்னும் ஒரு குருவும் எதிர்பார்க்கப்படுகின்றார். இவர் ஆசீர்வாதப்பர்சபையின் பிரதம தலைவரான பென்னோகுத் சுவாமிகள்.

எதிர்பார்க்கப்படும் இரகசியக் கூட்டம் நடைபெற்றால், இது பரிசுத்த தந்தை தம் மூவருடஆட்சியில் நடத்திய ஐந்தாம் இரகசியக் கூட்டமாகும். இதுவரை பரிசுத்த தந்தை 40புதியகர்தினால்களை நியமித்துள்ளார். மறைந்த தந்தை 12ஆம் பத்திநாதர் தம் 19வருட ஆட்சியில் இரு இரகசியக்கூட்டங்களை நடத்தினார். 34புதிய கர்தினால்களை ஏற்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க மாணவ இயக்கத்தினர்
# முகாமமைத்தனர்

புரட்டாசிமாதம் 30-ந்திகதி முதல் ஐப்பசி முதல்தேதிவரை கத்தோலிக்க பாடசாலைகளின் கத்தோலிக்க வாலிப இயக்கத்தினர் முதன்முதலாகக் கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரியில் முகாமிட்டுப் பலதரப்பட்ட விடயங்களை ஆராய்ந்தனர். பரிசிலனை முகாம்களின் அங்கத்தினர் அதிகரித்ததன் காரணமாக இதை இருபிரிவாகப் பிரித்துச் சர்வகலாசாலை மாணவ இயக்கம், கல்லூரி மாணவ இயக்கம் என இருகூறுக்கப்பட்டுவிட்டது. வழமையாக, வாலிப இயக்கமுகாம் சித்திரை மாத விடுமுறையிலேயே நடாத்தப் பட்டுவந்தது.

கொழும்புக்கு அணித்தாயுள்ள மாணவர் உடனுக்குடன் வீடுதிரும்பக் கூடியதாகவும், வெளிமாணவர் தங்கிப் போவதற்கான ஒழுங்குகளும் செய்யப் பட்டிருந்தன. யாழ்ப்பாணமுதல் காலிவீருகவுள்ள கத்தோலிக்க மாணவ இயக்கங்களின் சார்பாக நூற்றுக்கு அதிகமான அங்கத்தவர்கள் முகாமில் கலந்துகொண்டனர்.

சத்தியம், வாழ்க்கை, செயல்ஆகிய இவற்றில் கத்தோலிக்க பயிற்சி என்னும் விடயமே ஆராயப்பட்ட விடயமாகும். வண. பீற்றர் கோமஸ் சுவாமி, திரு. ஜி. ஐ. ஓ. எம். குருகுலசூரியா, செல்வி நாயுடு என்பவர்களால், சத்தியம், வாழ்வு, செயல் என்பன பற்றி உரைநிகழ்த்தப்பட்டது. விடயங்கள் விவாதிக்கப்பட்டன. சந்தேகங்கள் தக்கபடி நிவிர்த்திக்கப் பட்டன.

---

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

### பருத்தித்துறையில்
### செபமாலைத்தாசரின்
## வைரயூபிலி விழா

வையகம் புகழும் வைரயூபிலி விழாவாக எம் நேசஅன்னையின் செபமாலைத் தாசர் விழா சென்ற 8-10-61 ஞாயிறுவாரம் பருத்தித்துறை அர்ச். தோமையார் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. மண்ணிலமீதில் தண்ணொளி வீசும் சூரியசந்திரதாரகைகள் பவனி எழும் செபமாலைமாதாவின் அடியார் கண்டுகளித்த பொன்னுள்அது. அத்தினம் தம்மைத் தேவதாய்க்கு அர்ப்பணித்த அறுபது ஆண்டுகளையும் கண்டுகளித்த நாலுபாட்டிமார் உட்பட ஏறக்குறைய நூறுமாதர் திலகங்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

இவ்விழாவிற்கு வரவேற்பு அளித்துப் புகழ்மாலை சூட்டுவதுபோல் வண. ஞானத்தந்தையர் அவர்களால் அகமும் புறமும் புனிதமடையும் வகையில், பசுமரத்தில் அறையப்பட்ட ஆணிபோல் உள்ளமென்னும் வயலைப்பண்படுத்தி விதைக்கப்பட்ட ஞானவிதையாகிய ஞானஒடுக்கம் என்னும் பயிர் விதைகள் மூன்றுநாட்கள் நடத்தப்பட்டது. தினமும் காலை திவ்வியபூசையும், மாலையில் தேவநற்கருணை ஆசீர்வாதமும், பிரசங்கமும் நடைபெற்றது.

8-ந்திகதி ஞாயிறுவாரம் கரும்பூதத்தை நிகர்த்த காரிருளை விரட்டி ஒழிக்க கிழக்குவானிலே அருணன் உதிக்கும் வேளையை, விடிவெள்ளி பிரகாசத்துடன் எடுத்துக் காட்டியது. பட்சிஜாலங்களின் இன்னிசையுடனும் குளிர்ந்த தென்றல்காற்றின் குளிர்ச்சியுடனும் அர்ச். தோமையார் தேவாலய திவ்விய பூசைமணி ஓசைகலந்து ஒலித்தது. மக்கள் யாபேரும் தமது அன்னையின் தினத்தைக் கொண்டாட மனமகிழ்வுடனும், நிறைந்தகளிப்புடனும், புனிதநிலையுடனும் தேவாலயம் சென்றனர். அங்கு பகல்வெற்றிபோல் சந்நிதானம் காட்சிஅளித்தது. பொன்னாலும், மணியாலும், நவரத்தினங்களாலும் இழைக்கப்பட்ட தேவலோகம்போன்று தேவாலயம் மிளிர்ந்தது. நறுமண மருவண்ணமலர்களால் பலிபீடம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பக்தர்குழாம் பக்தியுடனும், உருக்கத்துடனும் தேவ அன்னையின் பூசையிற் பங்குபற்றினர்.

ஞாயிறுவாரம் அந்திமயங்கும் நேரம். வானெங்கும் பொன்வண்ணம் தீட்டும் எழில்மிகு வேளை. சுமார் நாலுமணியளவில் நறுமலர்களில் ஒரு மலராய், வாடாத பொன்மலராய், தேவமணம் கமழும் வானரசியும், இடையில் நீலக்கச்சுக்கட்டிக்கொண்டவளும், சர்ப்பத்தைக் காலாலே மிதிப்பவளுமாகிய செபமாலைத்தாயின் எழில் ஓவிய ஊர்வலம் ஆரம்பமாகியது. செபமாலைத்தாசர் போர்வீரர் அணிவகுத்துச் செல்வதுபோன்று இருமருங்கிலும்செல்ல, பாடகர்குழாம் ரீங்காரம் செய்யும் வண்டுகள்போல் பண்ணிசைத்தும், மோட்சவழி செல்லும் ஏணியாகிய திருவடம் ஓதியும் சென்றகாட்சி கண்கொள்ளா மாட்சியாக இருந்தது.

பலிபீடத்தில் கொழுந்து விட்டெரியும் மெழுகுவர்த்திபோல் அன்னையின் சுற்றுப்பிரகாரத்தில் சென்றமாந்தர்களின் உள்ளங்களில் பக்திப்பிரவாகம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட வீதிகளினூடே மரியநாயகியின் திருச்சுரூபம் பாலாடைபோன்ற வெண்துகில் புனைந்த கன்னியர்களால் உன்னதமாக ஏந்திச் செல்லப்பட்டு இறுதியில் கோயில்சந்நிதானத்தை ஊர்வலம் வந்தடைந்ததும் விழா இனிதே நிறைவாயிற்று.

'கிருபர்'

---

### சின்னமலரின்
## ஆலய அபிஷேகம்

திம்பிறிகாசாயாயவில் உள்ள அர்ச். சின்னத் தெரேசம்மாளின் வருடாந்த உற்சவங்கள் கடந்தமாதம் 29-ம்திகதி ஆரம்பமாகி இம்மதி 8-ந்திகதி திருநாட்பூசையுடன் முடிவெய்தின. இவ்விழாக்களின் முடிசூடிய வைபவம்போன்றமைந்திருந்தது ஆலய அபிஷேகவைபவம். 10 வருடங்களாக மிகவும் பிரயாசையுடன்கட்டி எழுப்பப்பட்ட இவ்வாலயம் அன்று அபிஷேகம் செய்யப்பட்டது அவ்வாலயத்துக்காக அரும்பணியாற்றியவர்களுக்கு உவகையூட்டிய சம்பவமாகும். ஆலயத்தைக் கொழும்பு அதிமேற்றிராணியாண்டவரவர்கள் அபிஷேகம் செய்துவைத்தார்.

ஆலயவைபவங்கள் வெள்ளிக்கிழமை 6-ந்திகதி ஆரம்பமாகின. மறுநாள் பிரதமபீடத்தில் வைக்கப்படவேண்டிய அர்ச்சியசிஷ்டர்களின் பரிசுத்தபண்டங்கள் அன்று இரவு முழுதும் வழிபாட்டிற்கு வைக்கப்பட்டிருந்தன. மறுநாள் 7-ந்திகதி அபிஷேகச்சடங்குகளின் பெரும்பகுதி இடம்பெற்றன. காலை 7-00 மணிக்கு ஆரம்பமான சடங்குகள் சுமார் $4\frac{1}{2}$மணிநேரம் நீடித்திருந்தன. புதியபீடத்தில் அதிமேற்றிராணியாண்டவரவர்களால் திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றுமாலை வேஸ்பர் எனும் மாலை ஆராதனை அதிமேற்றிராணியாரால் பாடப்பெற்றது. அப்பொழுது ஆண்டகையவர்கள், இவ்வாலயத்தைக்கட்டி எழுப்ப அயராதுழைத்த கட்டளைக்குரவர் வண. பிரெண்டோ, ஓ. பி. அவர்களையும், மற்றும் அவரோடு ஒத்துழைத்தவர்களையும் பாராட்டினார். மேலும் அவர் கொழும்பு அதிமேற்றிராசனத்துக்கு வெளியே பல கோவில்கள் அர்ச். சின்னத்தெரேசம்மாள் பெயரினால் கட்டிஎழுப்பப்பட்டுள்ளன. ஆனால், மேற்றிராசனத்தில் அர்ச். சின்னத்தெரேசம்மாள் பெயரினால் கட்டப்பட்ட ஆலயம் இது ஒன்றே என்றார். அதன்காரணமாகவே இவ்வாலயத்தை [illegible] விரும்பினர் என்பதையும் தெரிவித்தார் அதிமேற்றிராணியார்.

8-ந்திகதி ஞாயிறுவாரம் திருநாட்பூசை வங். டாக்டர் றெஞ்ஞோ ஆண்டகையவர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருச்சபையின் செல்லப்பிள்ளை ஆகிய சின்னமலரை நெருக்கிடைகளும், இன்னல்களும் சூழ்ந்த இக்காலத்தில் எல்லோரும் கண்டு பாவிக்கவேண்டிய அவசியத்தை மேற்றிராணியாண்டகை தமது பிரசங்கத்தில் வலியுறுத்தினர். செபமாலையிலே சின்னமலர் காட்டியபற்றுதலைப் பின்பற்றும்படி ஆண்டகை விசுவாசிகளை வேண்டிக்கொண்டார்.

இவ்வாலய அபிஷேகத்துக்கெனவிசியா என்னுமிடத்தில் சின்னமலர் சீவித்தமடத்தின் சிரேஷ்டதாயார் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட சின்னமலரின் பரிசுத்தபண்டம் ஆலயத்தில் குழுமியிருந்தவர்கள் முத்திசெய்யும்படி வைக்கப்பட்டிருந்தது.

சின்னமலருக்கு அவ்விசாரணைப் பங்கைக் காணிக்கையாகவைக்கும் வைபவத்தோடும், மெழுகுதிரிச்சுற்றுப்பிரகாரம், ஆசீர்வாதத்துடனும் விழா இனிதே நிறைவெய்தியது.

---

### பலாங்கொடையில்
### அர்ச். அந்தோனியார் ஆலய
## வெள்ளிவிழா

பலாங்கொடையில் அர்ச். அந்தோனியார் ஆலயவருடாந்தவிழாவும், அவ்வாலய வெள்ளிவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. மேற்படி விழாவுக்கு, காலி மேற்றிராணியாரான வங். டாக்டர் என். எம். லவுடாடியோ ஆண்டகையவர்கள் சமூகமளித்துச் சிறப்புச்செய்தார்கள். விசாரணைப் பங்குமக்கள் அவரை மாலைஅணிவித்து வரவேற்று அழைத்துச் சென்றனர். அன்று ஞாயிறுவாரம் ஆண்டகையவர்களினால் திருநாட்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானமும் ஆண்டகையினால் அருளப்பட்டதும் இரத்தினபுரி வட்டாரப்பகுதிக்கு இவ்வாலயப் பரிபாலனஉரிமை மாற்றப்பட்டிருக்கிறதென்பது அறிவிக்கப்பட்டது. திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும், அன்னதானமும் வழமைபோல் இடம்பெற்றன.

---

### தேவத்தை திருப்பதியில்
## குடும்பதினம்

அடாதுமழை பெய்தாலும் விடாது நாடகம்நடாத்தப்படும் என்றாற்போல, தேவத்தையில் குடும்பதினம் பெருமழையையும் பொருட்படுத்தாது குறிப்பிட்டதினத்தில் 15-10-61-ல் நடந்தேறியது. உடனுக்குடனே திட்டங்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டன. பலத்த மழைபெய்து வைபவங்கள் ஆரம்பமாவதற்கு ஒருமணி நேரத்துக்கு முன்னால் ஓய்ந்துவிட்டபோதும் தூற்றல் இருந்துகொண்டே இருந்தது. எல்லாவித இன்னல்கள் மத்தியிலும் மக்கள் பெருமளவில் வந்துகொண்டேயிருந்தனர். நீர்கொழும்பு, மொறட்டுவை, பாணந்துறை அவிசாவலை முதலாம் இடங்களிலும், கொழும்பு அதிமேற்றிராசனத்தின் பலபகுதிகளிலுமிருந்தும் திரண்டுவந்தனர்மக்கள். ஏறக்குறைய அதிமேற்றிராசனத்தின் எல்லாச்சிறிய விசாரணைப்பங்குகளிலுமிருந்தும் [illegible] த்தையில் வந்து சேர்ந்திருந்தனர். எல்லோருக்கும் பிரயாணவசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. யேசுவின் திருஇருதயபக்திச்சபையினரும் மற்றும் தொண்டரும், இத்தினத்தைக் கொண்டாடுவதற்கு விசேஷ சிரத்தையும் ஊக்கமும் நல்மனமும் காட்டித் தொண்டாற்றினர்.

எல்லாவித இடையூறுகள் மத்தியிலும் திட்டப்படி நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடைபெற்றன. சிறுவர் நிகழ்ச்சிகள் மிகவும் வசீகரமாய் நிறைவேறின. ஆங்கிலம், சிங்களம், தமிழ் எனும் மும்மொழிகளிலும் சிறுவருக்கு உரையாற்றப்பெற்றது. அவர்களுக்கெனப் பின்னேரப்பூசையும் நிறைவேற்றப்பட்டது.

மொன்சிஞ்ஞோர் ஏ. டி. சேரம் பெற்றோருக்கு உரைநிகழ்த்துகையில் யாத்திரிகர்கள் இவ்வளவு துணிவோடும், ஆர்வத்தோடும் சகலஇன்னல்களையும் சகித்து வந்தமையைப் பாராட்டினார். அதன்பின் அதிமேற்றிராணியாண்டகையவர்கள் முன்னிலையில் கலியாண வார்த்தைப்பாடுகள் மும்மொழிகளிலும் புதுப்பிக்கப்பட்டன. ஆண்டகை அவர்கள் மெய்விவாக வார்த்தைப்பாட்டின் புதுப்பித்தல்களை ஏற்றதும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமருளினார். அப்போது, குடும்பங்கள் தேவதாயாருக்குக் காணிக்கையாக்கப்பட்டன.

சிறுவர் நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும், பெற்றோர் குழுக்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அதிமேற்றிராணியார், பெற்றோருக்கான மாலைத்திவ்விய பூசை நிறைவேற்றினார். பூசையின் போது குடும்பங்கள் காணிக்கைப் பகுதியில் பீடத்துக்குச் சென்று அதிமேற்றிராணியாரிடம் ஞானப்பூச்செண்டுகளை அர்ப்பணித்த காட்சி எல்லோரையும் பரவசமாக்கியது.

---

## கோட்டு விற்பனவு
## விளம்பரம்

**இல. M. B. 3726**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

நாரந்தனை

1. E. ஐயாத்துரையும் அவரின்மனைவி
2. நாகம்மாவும்

— வழக்காளிகள்.

எதிராக, நாரந்தனை
கிறிஸ்தோப்பிள்ளை பேதுருப்பிள்ளை

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3726-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம்ஆண்டு மார்கழிமாதம் 2-ந்திகதி (2-12-61) சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,039/73. 3-11-60 தொடக்கம், 1-2-61வரைக்கும் ரூபா 700-க்குப் 12%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச் செலவு 177ரூபா 52சதமும். கோட்டுச் செலவில் 100ரூபா கொடுபட்டுள்ளது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோயிற்பற்று, நாரந்தனைஇறை "ஏற்றுமண்குளத்துக்குத் தெற்குக்கவட்டு" நெற்பரப்பு 10, குளி 10-இல் மேற்குப்பக்கமாக அறுதிவிற்ற நெற்பரப்பு 5, குளி 5 நீக்கி மீதி நெற்பரப்பு 5, குளி5-உம், கிணறும். இதற்கு எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — தெரு. மேற்கு — கிறிஸ்தோப்பிள்ளை பெஞ்சமினின் ஆதனம். தெற்கு — மேற்கூறப்பட்டுள்ள எதிராளியின் ஆதனம். இதடங்கலும். இதுமுழுதும் C239/138-இன்கீழ் பதிவு செய்யப்பட்டது.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

இல. 19, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## டக்ருக்குப் பிரிவோபசாரம்

மூளாய்க் கூட்டுறவு ஆஸ்பத்திரியிலே வைத்தியதொண்டாற்றி வருகிறவரான டக்ரர் எம். ஓ. சாக்கோ அவர்களின் நண்பர்களும், அபிமானிகளும் சென்ற 7-ந்திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரியில் நடத்தியகூட்டமொன்றிலே, டக்ரர்சாக்கோ அவர்கள் தம்முடையபதவியிலிருந்து இளைப்பாறிக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்புமுன் யாழ்ப்பாணமக்கள் சார்பாக அவருக்குஒருபகிரங்க பிரியாவிடைக் கொண்டாட்டம்நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்குவேண்டிய ஒழுங்குகளை உடனடியாகச் செய்வதற்கென த் திரு. கே. கனகரத்தினம் அவர்கள் தலைமையில் ஒருநிர்வாகசபை நியமிக்கப்பட்டுள்ளது. வருகிறகார்த்திகைமாதத்தின் முதல்வாரத்திலே இப்பிரியாவிடைவைபவம் நிகழவிருக்கிறது.

## நைஜீரியா சென்றார்

கண்டியிலே சமீபகாலம்வரை கட்டட நிர்வாக எஞ்சினியராய் இருந்துவந்தவரான திரு. ஆர். ஆர். ஜெயராஜா அவர்கள் அரசாங்கசேவையிலிருந்து ஒய்வுபெற்றுக்கொண்டு, ஆபிரிக்காவிலே கிழக்குநைஜீரியநாட்டுஅரசாங்கத்தில் நிர்வாகஎஞ்ஜினியராகப் பதவியேற்றுச் சென்ற12-ந்திகதியன்று தமதுபாரியாருடனும், இருபிள்ளைகளுடனும் விமானமூலம் நைஜீரியாவுக்குப் பயணமாயினர். இவர் இணுவில் மைக்லியட்ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் திரு. ஈ. ஜே. ஜெயராஜா தம்பதிகளின் புதல்வராவர்.

## ஆசிரியரும் நியமனங்களும்

இனிமேல் வித்தியாதிபதியின் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளிலே புதியநியமனங்கள் செய்யப்படும்போதெல்லாம் அப்பாடசாலைகளின் அதிபர்களும் கலந்தாலோசிக்கப்படுவார்கள். அவர்களின் ஆலோசனையைக்கேளாமல் செய்யப்படும் நியமனங்களால் பாடசாலைகளின் நடைமுறைகள் பாதிக்கப்படுவது விளக்கிக்காட்டப்பட்ட பின்னரே இவ்வாறு தீர்மானிக்கப்படலாயிற்று.

## பாம்புக்கடி வைத்திய சிகிச்சை

யாழ்ப்பாண மாநகரசபை நடத்திவருகின்ற இலவசஆயுர்வேத வைத்தியசாலையிலே இலவசவைத்தியசேவை செய்யும்படியாய்ப் பாம்புக்கடி வைத்தியநிபுணரான ஆசிரியர் க. சிற்றம்பலம் அவர்களை யாழ்ப்பாண மாநகரசபை கேட்டுக்கொண்டதற்கிசைந்து அவ்வைத்தியசாலையிலே அவர் இலவசசிகிச்சையளிக்க இணங்கியுள்ளாரெனத் தெரியவருகிறது.

## மந்திரி பாராட்டுகின்றார்

அநுராதபுரத்திலே அகில-இலங்கை புத்தகாங்கிரஸின் ஆதரவிலே அமைக்கப்பட்டுள்ள செவிடர்-குருடர் பாடசாலையொன்றைக் கைத்தொழில்-உள்நாட்டு-கலாசாரமந்திரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா திறந்துவைத்துப் பேசியபோது: வடமத்தியமாகாணத்திலே நடத்தப்பட்டுவந்த குருடர்-செவிடருக்கான ஒரேயொரு கல்விஸ்தாபனம் இற்றைக்குஏறக்குறைய ஐம்பதுவருடங்களுக்குமுன் கத்தோலிக்க திருச்சபையாலே திறக்கப்படலாயிற்று; அந்தஸ்தாபகம் ஆரம்பமான நாள்முதல் செய்துவந்துள்ள சேவைக்காக மக்கள் கத்தோலிக்கதிருச்சபைக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டுமெனக்கூறலாயினர்.

## திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

தமிழரசுக்கட்சி முதல்வரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியூ. சி. அவர்கள் தமதுபாரியார்சமேதராய்ச் சென்ற18-ந்திகதி புதன்கிழமை லண்டன்நகரிலிருந்து 'ஐபீரியா'எனும் கப்பலிலே இலங்கையை நோக்கிப் பிரயாணமாகி யிருக்கின்றார். இந்தக் கப்பல் இம்மாதம்31-ந்திகதி செவ்வாய்க்கிழமை பம்பாய்த்துறைமுகம் வந்துசேரும். அங்கிருந்து விமானமூலம் அவர் கொழும்புவந்துசேரக் கருதியிருப்பதாகத் தெரியவருகிறது.

## ஆசிரியரும் இடமாற்றமும்

குற்றச்சாட்டின்பேரிலே ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது அக்குற்றச்சாட்டைப்பற்றிச் சரிவர விசாரணை செய்தபின்னரே அம்மாற்றம் செய்யப்படவேண்டுமென்று கல்வி அதிகாரிகளுக்கெல்லாம் கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றார். ஒருபாடசாலையிலிருந்து ஆசிரியர்கள் இடமாற்றஞ் செய்யப்பட நேர்ந்தால் அதில் கடைசியாகச்சேர்ந்தவரும், குறைந்ததராதரம் உடையவருமே முதலில் மாற்றப்பட வேண்டுமென்றும் மந்திரிதெரிவித்திருக்கிறார்.

## மாலையும், மகுடமும் வேண்டாம்

ஊர்காவற்றுறை எம். பி திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் தடுப்புக்காவலிலிருந்து விடுதலையடைந்தபின் முதன்முதலாகச் சென்ற21-ந்திகதியன்று மண்டைதீவுக்கு விஜயஞ்செய்தார். அப்போது தமக்குஅளிக்கப்பட்ட வரவேற்பிற்குப் பதிலளிக்கையில், அவர் பேசியபோது: தலைவர்களை வரவேற்பதற்கெனச் செலவிடும்பணத்தைத் தமிழ்மக்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்காகச் செலவிடவேண்டும்; மகுடம்சூடுவதிலும், மாலைசூடுவதிலும் எவ்விதபயனுமேஇல்லை; இவைகளெல்லாம் அவசியமற்ற சம்பிரதாயங்கள்; இவைகள் எமக்குவேண்டாம்; பொருளாதார விடுதலையே—பொருளாதார அபிவிருத்தியே—வளமானவாழ்வே எமது முக்கியகுறிக்கோளாக இருக்க வேண்டுமெனக் கூறலாயினர்.

## மேயரின் வேண்டுகோள்

நாட்டிலே அம்மைநோய் தலைகாட்டியிருப்பதைமுன்னிட்டு யாழ்ப்பாண மேயர் நகரமக்களுக்கு விடுத்துள்ள ஒருபகிரங்க வேண்டுகோளிலே ஒவ்வொருவரும் அம்மைப்பால் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும், பஸ்நிலையத்திலும், சுகாதாரகாரியாலயத்திலும் அம்மைப்பால் கட்டிக்கொள்ள விசேஷஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்திருக்கிறார்.

## எம். பி. களின் பிரயாணம்

சென்ற1960-ம்ஆண்டு ஆடிமாதம் 20-ந்திகதிமுதல் இதுவரை பாராளுமன்ற அங்கத்தவர்களும், செனற்றர்களுமாக 42பேர் வெளிநாடுகளுக்கு 55பிரயாணங்கள் நடத்தியிருப்பதாகச் சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் டக்ரர் என். எம். பெரேரு கூடியதொகையாக நான்கு முறையும், பிரதமரும், நிதிமந்திரியும் மூன்றுமுறையும், வேறு அறுவர் இரண்டுமுறையும் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். இந்தப்பிரயாணங்களால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட செலவு 62,540ரூபாவாகும். பிரத்தியேகபணமாக ஒருஇலட்சம்ரூபா செலவாகியுள்ளது.

## ஆசிரியருக்கு எச்சரிக்கை

நான்குபாடப்புத்தகங்களுக்குமேல் பிள்ளைகளை வாங்கச்செய்யும் ஆரம்ப பாடசாலைகளின் ஆசிரியர்கள்மீது ஒழுங்குநடவடிக்கைஎடுக்கக் கல்விப்பகுதி முடிவுசெய்திருக்கிறது. வித்தியாதிபதியின் உத்தரவுப்படி, எண்கணிதம், சமயம், இரண்டாவதுமொழி, தாய்மொழியாகிய நான்குபாடப்புத்தகங்களை மாத்திரமே வாங்குமாறு பிள்ளைகள் கேட்கப்படவேண்டும். நான்குக்குமேல் வாங்கச்செய்து குற்றமிழைக்கும் ஆசிரியர்கள் பெற்றோருக்கு நஷ்டஈடுகொடுக்கச் செய்வதுபோன்ற தண்டனைவிதிப்பதுபற்றி ஆலோசனை நடக்கின்றது.

## அம்மைநோய் கண்டவர்கள்

குருநாகல்மாவட்டத்திலே கிரிமெத்தியாவா, உடகொருக்கா, அனுகன்ஹேன, முனமல்தேனியா எனும் நான்குகிராமங்களிலும் இதுவரை அம்மைநோய்கண்ட பத்துப்பேரில் மூவர்இறந்துவிட்டதாக அறிக்கையிடப் பட்டிருக்கிறது. இந்தநான்கு கிராமங்களும் ஒன்றையொன்று அடுத்தனவும், பெருந்தெருக்களிலிருந்து அதிகதூரத்தில உள்ளனவுமாகும். இந்தநான்குகிராமங்களும் அம்மைநோய்ப்பகுதியாகப் பிரகடனஞ்செய்யப்பட்டுள்ளது. அவ்வாறாக, அம்மைநோயினால் பீடிக்கப்பட்டு அங்கொடைத் தொற்றுநோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தஒருவர் சென்ற சனிக்கிழமை மரணமானாரெனப் பிந்தியசெய்தி தெரிவிக்கின்றது.

## தேசியகல்வித்திட்டம்

கொட்டாஞ்சேனையிலே சென்ற ஞாயிற்றுக்கிழமை தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயகா புத்தகுருமாருக்கு நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிலே, மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் தேசியகல்வித்திட்டம் வெளிவரும்அறிகுறிகள் காணப்படவில்லை; தேசியகல்வித்திட்ட கமிஷன் அங்கத்தவர்கள் சிலரிடையே பலத்த அபிப்பிராயபேதம் ஏற்பட்டுள்ளது; கல்வியில் தேசியமனப்பான்மையை உண்டுபண்ணச் சிலஅங்கத்தவர்கள் எதிர்ப்புக்காட்டியமையால் இந்தநிலை எழுந்ததெனக் கூறலாயினர்.

## புதியசமாதான நீதவான்

கண்டியிலே போதனைவீதியில் வசிப்பவரான திரு. பி. ஆசிர்வாதம் அவர்கள் கண்டி நீதிப்பரிபாலன மாவட்டத்திற்கு ஜே. பி. எனப்படும் சமாதானநீதவானாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் கண்டி, அர்ச். அந்தோனியார்கல்லூரிப் பழையமாணவராவர்.

## புதியவிற்பனவு நிலையம்

தமிழ்ப்பகுதிகளிலே கைப்பணிப் பொருட்கள், விவசாயப்பொருட்களைச் சேகரித்து விற்பனைசெய்வதற்கெனப் புதியவிற்பனவு நிலையம்ஒன்று பெரியகடை, காங்கேசன்துறை வீதியிலுள்ள 713-ம்இலக்கக் கட்டடத்திலே சென்ற 20-ந்திகதி வெள்ளிக்கிழமையன்று டக்ரர் எஸ். சுப்பிரமணியம் அவர்களால் திறந்துவைக்கப் பட்டுள்ளது. தமிழ்ப்பகுதிகளின் பொருளாதார அபிவிருத்தியையே தனதுஇலட்சியமாகக்கொண்டுள்ள ஈழப்பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தினாலே நடத்தப்படும் இந்தவிற்பனவுநிலையத்திலே உள்ளூர்த் தொழிலாளராலும், கைப்பணி வேலையாளராலும் தயாரிக்கப்பட்ட பாய்கள், விளையாட்டுப் பொருட்கள், பக்குவப்படுத்திய பழவகைகள் ஆதியனசேகரிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.


## நேயர்கள் கவனிக்கவும்

எனது கண்பரிசோதனை நிலையத்துக்குப் பக்கத்தில் "பெர்னன்டோ" என்ற விலாசத்துடன் ஒரு நிலையம் ஆரம்பமாகியுள்ளது. அது எனது நிலையமன்று.

வி. ரி.
பெர்னன்டோ,
பல் வைத்தியர், கண் பரிசோதகர்
11, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3469

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

வட்டுக்கோட்டை
வட்டுக்கோட்டை மேற்கு
வேலுப்பிள்ளை கந்தையா —வழக்காளி.
எதிராக, அராலி மேற்கு
1. வேலுப்பிள்ளை விஜயதெய்வேந்திரம்
2. பெண் தங்கதேவி (மூளாய்)
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3469-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1961-ம்ஆண்டு மார்கழிமாதம் 9-ந்திகதி சனிக்கிழமை (9-12-61) முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,428/75-உம், இன்னும் ரூபா 1125-க்கு 29-6-1960 தொடக்கம், 7-10-1960 வரைக்கும் 100-க்கு 9%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு 7-10-1960 தொடக்கம் இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 187ரூபா 30சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்மேற்கு வட்டுக்கோட்டை கோயிற்பற்று, வட்டுக்கோட்டை மேற்கு இறை "இறுவன்" பர. நில. இலா. பதினேழு. அராலி, தெற்கும் மேற்கும் இறை 'நல்லையிருகலட்டி' பர. நில. இலா. இருபதரையே அரைக்கால் ஆக பர. நில. இலா. முப்பத்தேழரையே அரைக்காலும், வீடும், கிணறும், வான்பயிர், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு — இராமசாமி கந்தையாவுக்குரிய ஆதனம். — வடக்கு — ஒழுங்கையும், அருணசலம் கைம்பெண் நாகமுத்துவுக்குரிய ஆதனமும். மேற்கு — அருணசலம் கைம்பெண் நாகமுத்துவுக்கும், சரவணமுத்துபெண் தங்கமுத்துவுக்கும் உரியஆதனங்களும், ஒழுங்கையும். தெற்கு — சின்னப்பு சுப்பிரமணியத்துக்கும், முருகேசு நடராசாவுக்கும், செல்லப்பா அருணசலத்துக்கும் உரியஆதனங்கள். இந்த எல்லைப்படி இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 24-10-61

## நன்றியறிந்த தோத்திரங்கள்

நான் மூன்றுமாதத்துக்குமுன் கடும் வியாதியால் கஷ்டப்பட்டேன். எனக்குச் சுகம்அருளும்படியாகத் திருஇருதயநாதரிடமும், பரி. சதாசகாயமாதாவிடமும், அர்ச். சூசையப்பர், யூதாததேயுவிடமும் கேட்டமன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். எனது நன்றியைத் தெரிவிக்குமுகமாக இதைப் பிரசுரஞ்செய்கிறேன்.

நாவற்காடு மாதாவின் அடியாள்

* * *

காத்திராப்பிரகாரம் திடீரெனஎனக்கு இடையில்ஏற்பட்ட நோயைக் குணமாக்கும்படி அர்ச் யூதாததேயு அப்போஸ்தலரிடம் நேர்ந்துகொண்டதன் பயனாகப் பூரண குணமடைந்தபடியால் எனது நேர்த்தியின்படி இதனைப் பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிக்கிறேன்.

வங்காலை லாஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி மாதம் 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | ஞா. | 1 | **கிறிஸ்துஇராசா திருநாள்** (பெந் பின் 23-ம்ஞாயிறு) (வி. ம.) | வெ. |
| 30 | தி. | ம. | காலதினம் (ஞாயிறு பூசை) | ப. |
| 31 | செ. | ம. | காலதினம் ( ,, ,, ) | ப. |

### கார்த்திகை மாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பு. | 1 | **சகல அர்ச்சியசிட்டர்கள் திருநாள்** (வி. ம.) | வெ. |
| 2 | வி. | 1 | **சகல மரித்தவிசுவாசிகளின் ஞாபகம்** | க |
| 3 | வெ. | யே | காலதினம் (ஞாயிறுபூசை) | ப. |
| 4 | ச. | மா. | அர்ச். கரோலூஸ் பொரோமையார் (பரிசுத்த பாப்பானவருக்குச் செபம்; அர்ச். வித்தாலிஸ் அக்றிக்கோலா ஞா.) | வெ. |


சத்திய வேத

**பாதுகாவலன்**

1961-ம் ஆண்டு

ஐப்பசிமாதம் 28-ந் திகதி


## பாரிய அணுக்குண்டுப் பரீட்சை

அன்று ஜேர்மன்சர்வாதிகாரியான ஹிற்லர் அகிலமுழுவதையும் கட்டியாளவேண்டுமென்ற கர்வசிந்தைகொண்டார். யுத்தசன்னதம் கொண்டவராய்ச் சேனைசைனியங்களைத் திரட்டிப் பலப்படுத்தினார். அண்டகோளங்களுமே அதிரும்படியாக யுத்தபேரிகை முழக்கினார். சத்துருநாடுகளில் ஒவ்வொன்றையும் இத்தனை இத்தனைநாட்களிலே வெற்றிகொள்வதென்று திட்டமிட்டுச் சூழ்ச்சிசெய்துகொண்டு யுத்தத்தில்இறங்கினார். வெற்றிக்கு மேல்வெற்றி ஈட்டிக்கொண்டு போனார். ஈற்றில் அவர்தொடங்கிய யுத்தம் ஓர்உலகயுத்தமாயிற்று. மின்னல்வேகத்தில் தொடக்கி, மின்னல்வேகத்தில்நடத்தி, மின்னல்வேகத்தில் வெற்றிமாலை சூடவேண்டுமென்று அவர்கட்டியிருந்த மனக்கோட்டை சின்னாபின்னமாயிற்று. ஐந்துமாதங்களுக்கு அல்ல, ஐம்பதுமாதங்களுக்குமேல் நீடித்த ஒருமகாயுத்தமாயிற்று. அதிலே இறுதியாகஅவர் தோல்வி கண்டார். தனதுஉயிரையே மாய்த்துக்கொண்டார். அவரும் அழிந்தார். அவர் சர்வாதிகாரியாயிருந்து அதிகாரஞ்செலுத்திவந்த ஜேர்மனியும்அழிந்தது. மேற்குஜேர்மனி, கிழக்குஜேர்மனியென்றும், மேற்குப் பேர்ளின், கிழக்குப்பேர்ளினென்றும் பிளவுண்டு அதன்கட்டுக்கோப்பே சீர்குலைந்தது. அதனைஎதிர்த்து யுத்தத்தில்ஈடுபட்ட நாடுகளும் பெருஞ்சேதமடைந்தன.

அப்போது ஹிற்லரும், அவருடன் சேர்ந்து முசோலினியும் செய்ததுபோன்று இப்போது ருஷியபிரதமர் குருஷேவும் உலகமேஅதிரும்படியாகச் செய்துவருகின்ற வீரகர்ச்சனையையும், வெற்றிமுழக்கத்தையும் கவனிக்கும்போது. "அண்டத்தைக் கையில்வைத்து ஆட்டும்பிடாரிக்குச் சுண்டங்காயும் சுமைகூலியாமோ" என்றபான்மையாய் ஒரேமூச்சில் உலகத்தையே ஒருகை பார்த்துவிடுவார்போல் இருக்கிறது. உலகசமாதானமென்றும், சகவாழ்வென்றும் காலந்தோறும் அறைகூவிக்கொண்டுவருகின்ற குருஷேவ் இன்று சமாதானத்திற்கும், சகவாழ்விற்குமே உலைவைக்க முனைந்து நிற்கின்றார். நிகழும்ஐப்பசிமாதம் 31-ந்திகதிக்குமுன் பெரிதும்நாசகரமான பூதாகார பயங்கர அணுக்குண்டுஒன்றை வெடிக்கவைத்துப் பரீட்சிக்கப் போவதாகச் சமீபத்திலே மஸ்கோநகரில் நடைபெற்ற கம்யூனிஸ்தகட்சியின் 22-வதுமகாநாட்டிலே அவர் முழக்கியமையானது உலகமுழுவதுமே பெரும் பரபரப்பை உண்டுபண்ணிவிட்டிருக்கிறது. அதனால் அதனைப் பரீட்சிப்பதை ஆட்சேபித்து எங்கெங்குமே கண்டனக்குரல் எழுந்துகொண்டிருக்கிறது. குருஷேவ்வெளியிட்டிருக்கும் இந்தப் பூதாகார அணுக்குண்டுப் பரீட்சையானது சோவியற் ருஷியாவின் அணுக்குண்டுப்பலத்தை எடுத்துக் காட்டிப் பேர்ளினிலோ, ஜேர்மனியிலோ, வேறெங்கோ தனதுஎடுப்புகளுக்கெல்லாம் முட்டுக்கட்டையிட்டு எதிர்த்துநிற்கும் மேற்கத்திய வல்லரசுகளைப் பயமுறுத்தி எச்சரிப்பதாகிய ஒருதிருவிளையாடலாகுமோ? தனது அணுக்குண்டுப் பலத்தைக்காட்ட அதுமுன்வந்திருப்பதானது உலகநெருக்கடிகள் உச்சநிலைஅடைந்துள்ள கேந்திரஸ்தானங்களில் தனக்குச்சாதகமான அரசியல்செல்வாக்கைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருதந்திரசூழ்ச்சியாகுமோ?

ருஷியா பரீட்சிக்கப்போவதாய்க் குருஷேவ் எடுத்துக்கூறிய இந்தப் பூதாகார அணுக்குண்டு ஐந்து கோடிதொன் நிறைகொண்டதாம். அப்போது ஜப்பானில் ஹிரோஷிமா, நாகாசகிநகர்கள்மேல் வீசிய அணுக்குண்டுகளைக்காட்டிலும் இரண்டாயிரத்து ஐஞ்ஞூறுமடங்கு பெரியதாம். வெடிக்கும்போது ஆகாயத்தைப்பார்த்தால் சூழவரப் பத்து இலட்சம்சதுரமைல் விஸ்திரணமான பகுதியில்வாழும் மக்களின் கண்பார்வை கெட்டுப்போய்விடுமாம். ஏழுமைல் விஸ்திரணமானபகுதியில் வாழும்மக்களை மறுலோகம் அனுப்பிவைக்குமாம். இன்னும் அதனால்ஏற்படும் எரிகாயங்களினாலும், கதிரியக்கத்தினாலும் பாதிக்கப்படுவோர்தொகை இம்மட்டல்லவாம் என்று அக்குண்டின் அனர்த்தங்களைப்பற்றி விஞ்ஞானிகள் வியாக்கியானம் செய்கின்றார்கள். இந்தக் குண்டை ருஷியா சென்றஞாயிற்றுக்கிழமை வெடிக்கச்செய்து விட்டதாயும் செய்தி பரந்துள்ளது. ஆனால், அது 5கோடிதொன்னுக்குக் குறைவான நிறையுடையதொன்றாம். நிற்க, வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில்உண்டல்லவா? குருஷேவின் முழக்கத்துக்கு எதிர்முழக்கம் போன்று சென்றசனிக்கிழமை அமெரிக்க உதவிப்பாதுகாப்புமந்திரி பேசியபோது: அமெரிக்கா பதினாயிரக்கணக்கான அணுக்குண்டுகளையும், அவைகளைக் கொண்டுசென்று குறித்தஇலக்கில் வீசக்கூடிய சாதனங்களையும் தயாராகவைத்திருக்கிறது; ருஷியா போரில்முந்திக்கொண்டு முதலில்தாக்குவதாக வைத்துக்கொண்டாலும் அதனால் விளையக்கூடிய சேதத்திற்கு முற்றிலும் இணையான சேதத்தை இரண்டாவதாகத்தாக்கும் அமெரிக்காவும் விளைவிக்கமுடியுமெனக்கூறிச் சோவியற்ருஷியாவை எச்சரித்திருக்கின்றார். ருஷியா போரில்முந்துகிறதானால், போர்ப்பலத்தில் முதன்மை பெற்றதானால் இதுவரை தனது கைவரிசையை அதுகாட்டியிருக்கும்; அதன் ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் அல்லவென்பது அனுபவத்தில் கண்டறிந்தத...

## கிறிஸ்து இராசா திருநாள் பூசையின் விளக்கம்

**இன்றைய பூசையின் சாரம்:** இன்றைய பொருள் கிறிஸ்துவே இல்லங்களுக்கும், இருதயங்களுக்கும், மக்களுக்கும், நாடுகளுக்கும், உலகமுழுவதுக்கும் இராசா என்று எடுத்து விளக்குகின்றது.

**பிரவேச வாக்கியம்:** இன்றைய பிரவேச வாக்கியம் 71-ம் சங்கீதத்திலிருந்து எடுக்கப்பட்டது. சிவப்பு அல்லது ஊதா நிறத்தை நாம் அரசுரிமைக்கு ஒப்பிடுகிறோம். கிறிஸ்துநாதரின் அரசுரிமை அவருடைய அரசாட்சியினால் காட்டப்படுகின்றது; அவரே எங்களுடைய அன்புக்காகத் தம்மைத் தாமே தியாகம்செய்தார். அவர் எங்களுடைய இருதயங்களைத் தமது அன்பினால் கைப்பற்றிக்கொண்டார் என்று பிரவேசவாக்கியம் நினைப்பூட்டுகின்றது.

**சபைச்செபம்:** குருவானவரோடு இணைந்து நாங்களும் கிறிஸ்துவின் அரசாட்சிக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படி வேண்டுவோமாக.

**நிருபம்:** கிறிஸ்துநாதரே வெற்றியின் இராசா. அவர் அந்தகார வல்லமையின்மேல் கொண்டவெற்றி எங்கள் நேசத்தையும் அன்பையும் அவர் வசப்படுத்துகிறார் என்று காட்டுகிறது.

**சுவிசேஷம்:** கிறிஸ்துநாதருடைய இராசரீக வார்த்தை மனதுக்கு உண்மையையும், இருதயத்துக்கு அன்பையும் அளிக்கின்றது: "நான் இராசா அதற்காகவே இவ்வுலகில் பிறந்தேன், சத்தியத்திற்குச் சாட்சி சொல்லும்படியே இவ்வுலகுக்கும் வந்தேன்."

**விசுவாச உச்சாரணம்:** நாங்கள் எல்லோரும் கிறிஸ்துநாதர் இந்த ஒரே உண்மைக்காக உலகத்துக்கு வந்தார் என்று ஏற்றுக்கொள்ளுகிறோமென்று பிரகடனம் செய்வோம்.

**காணிக்கை:** எங்கள் இருதயங்களையும், குடும்பங்களையும் வீடுவாசல்களையும், நாட்டையும் அவருக்கு ஒப்புக்கொடுப்போம்.

**முகவுரை:** நாங்கள் பரிசுத்த திரித்துவத்தை இந்தப் புகழ்ச்சிக்குரிய செபத்தில் மகிமைப்படுத்துகிறோம்.

பிதாச்சருவேசுரன் எங்களைப் படைத்தார்.

சுதன்சருவேசுரன் எங்களை இரட்சித்தார்.

இஸ்பிரீத்துசாந்துசருவேசுரன் எங்களைப் பரிசுத்தமாக்கினார்.

ஆகவே, நாங்கள் தூதர்களோடும் அதிதூதர்களோடும் சேர்ந்து அவரைப் புகழுவோமாக.

**தேவவசீகரம்:** இந்த ஆழ்ந்த மௌனத்தின்பின் தொடர்ந்துவரும் வசீகரப்பகுதியில் நாங்கள் எங்களுடைய அன்பைக் கிறிஸ்துராசாவுக்காக அதிகரிப்போம். இவருடைய தியாகத் தோற்றம் நீசமனிதனாகிய எனக்கு ஆறுதல் அளிக்கின்றது.

**பலிவிருந்திற்கு ஆயத்தம்:** நாங்கள் குருவானவரோடு ஒன்றுசேர்ந்து பரமண்டலமந்திரத்தைச் சொல்லுவோம். ஏனெனில், இதுவே கிறிஸ்தவர்களின் பரிசுத்த விருந்தாகிய தேவநற்கருணைமுன் சொல்லவேண்டிய செபமாகும்.

**அனுபவிப்புப் பகுதி:** இராசாதி இராசனும், மரியாயின் உதரத்தில் உதித்தவருமாகிய கிறிஸ்து, பாவியும் தரித்திரனுமாகிய எனக்குச் சாகாமையைத்தரும் ஆகாரமாகத் தன்னைத் தேவநற்கருணைமூலம் தருகிறார்.

## செபமாலையைச் செபிக்கப் பாப்பரசர் கூறும்முறை

"செபமாலையைச் சரியாய்ச்செபிப்பதற்குத் தியானம், யோசனை, நற்கருத்து ஆகிய மூன்று அமிசங்கள் தேவை" எனப் பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பர் அண்மையில் விடுத்த நிருபத்தில் விளக்கியுள்ளார்.

**தியானத்தில்** எமது கர்த்தரின் மறைந்த மோனவாழ்வு, அவருடைய பாடுகளின் சோபசந்தாபம், அவருடைய உத்தான மகிமை ஆதியவைகளால் அவர் எமக்குக் கற்பிப்பவைகளை ஒருமித்த கருத்துடன் பெற்று, அன்பில் இரண்டறக் கலந்துகொள்ளுகிறோம்.

**யோசனையில்** அக்கருத்துக்களை எமது அர்ச்சிப்பிற்கும், வாழ்க்கைக்கும் ஏற்கப் பொருத்திக்கொள்ளுகிறோம்.

**நற்கருத்தில்** எமது தேவைகளையும், பொதுமக்கள் சமூகங்களினது தேவைகளையும் நோக்குகிறோம். அவை எமதுஅன்பிற்குஇலக்கானவை; இவ்வன்பு கிறிஸ்துவின் மறையுடலில் அங்கம் வகிப்போரிடம் விளங்கவேண்டிய அன்பு எனச் சேவைபுரியும் பத்தியுள்ள கத்தோலிக்கர் நன்கறிவர்.

இம்முறையில் செபித்தால், செபமாலை தனித்தவர்களதும், பொதுமக்களதும் தேவைகட்கு அவசியமான அருளைத்தரும் ஊற்றாகும்.

செபமாலை செபிக்கும்பொழுது ஒவ்வொருவரும் தன்தன் லௌகீக, வைதிக நோக்கங்களைமாத்திரம் நினைத்துக் கொள்ளக்கூடாது. தான் முழுச் சமுதாயத்துக்கும் சேர்ந்தவன் என நினைவுறுத்தி, அதன் கடமைகளில் தானும் பங்கெடுத்து, நலன்களைத் தானும் சுவைத்து, நிர்ணயமற்றவைகளையும், ஆபத்துக்களையும் தானுமனுபவிக்கவேண்டும்.

தேவஅன்னையின்மேல் கொண்டுள்ள பக்தி மானிடரை அச்சுறுத்திக்கொண்டிருந்த கேடுகளிலிருந்து காத்ததுமன்றிச் சமாதானத்தை வேண்டுவதற்கு ஏதுவாகவுமிருந்தது என்பது சரித்திரங் கூறும் சான்றாகும். கிறிஸ்துவ கருத்துப்படி சமாதானமென்றால், மனங்கள் உண்மையையும், நீதியையும் ஒப்புக்கொள்வதும், மக்களிடையே சகோதர மனப்பான்மை நிலவுவதும், எவ்வித பிளவுகளையும், பிரமைகளையும் அகற்றுவதும் என்றே கொள்ளப்படும் என்க.

### இதுதான் இல்லறத்தாரின் நேரம்

திருச்சபையின் வாழ்வில் இல்லறத்தாரின் முக்கியத்துவம் அதிகமதிகம் உணரப்பட்டு வருகின்றது. இத்தாலியில் ரெக்கோராரோ என்ற இடத்தில் நடந்த மாநாட்டில் மேன்மைதங்கிய கருதினால் செந்தோஆண்டகை "இது தான் இல்லறத்தாரின் நேரம்" எனக் கூறினார். செந்தோ ஆண்டகை பொதுச்சங்கத்திற்குத் தயார் செய்துவரும் 'இல்லறத்தாரின் அப்போஸ்தலம்' எனும் குழுவிற்குத் தலைவர். அவர் மேலும் கூறியது: "இல்லறத்தாரின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தாமலும், குறைக்காமலும் காத்தல் அவசியம்' என எச்சரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் மன்றம்

# சிறுமலர் தெரேசாளும் வேதனையும்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

காமலிருப்போமாக. அது நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டிய பொற்சுரங்கம். நாம் இந்தவாய்ப்பை நெகிழவிடுவோமா?".

இக்கட்டத்தில் தெரேசாள் வேதனைக்கு அதற்குரிய இடத்தைக்கொடுக்கிறாள்— **கடவுள் நம்மீது வைத்துள்ள அணைகடந்த அன்பே.** யேசுபால்கொண்ட அன்பினால் நாம் மனமுவந்து வேதனையைப் பெற்றுக்கொண்டால், மோட்சத்தில் பெரும் மகிமையை அடைவோமென மீண்டும் உறுதிப்படுத்துகிறாள். **யேசுவோடு ஒன்றித்து நாம் துன்பப்படும்போது, சிலுவை அளவற்ற மதிப்பைப் பெறுகிறது.**

இந்தக்கருத்தை அவளது கடிதம் இன்னும் நன்றாய்த் தெளிவுபடுத்துகிறது. "செலீன், நல்லகடவுள் உலகத்தையும், அதிலுள்ள கருவூலங்கள் அனைத்தையும் நமக்குக் கொடுத்தபோதிலும், அது அற்ப வேதனைக்கு ஒப்பாகாது.

கடவுள் பாராட்டுக்குரியவர். ஆனால், எல்லாவற்றிற்குமேல் அவர் நமதுஅன்புக்கு உரியவர். அவர் எனைத்தெரிந்து அனுப்பினபோதிலும், நாம்அதைப் பட்டுஅனுபவிப்பதற்குப் போதுமான அளவு நாம் அவரை நேசிப்போமாக."

சுவிசேஷ செய்தியைத்தான் தனக்குரியமுறையில் சிறுமலர் தெரேசாள் எடுத்துரைக்கிறாள். "யாதொருவன் என்பிறகேவர மனதாயிருந்தால் தன்னைத்தானே பரித்தியாகஞ்செய்து தன் சிலுவையை அனுதினமும் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லக்கடவான்" (லூக். 9: 23). "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்பிறகே வாராதவனும் எனக்குச் சீஷனாயிருக்கக் கூடாது" (லூக். 14: 27).

நமது சிலுவைகளை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்ளவேண்டும்? முணுமுணுத்துக்கொண்டா? மகிழ்ச்சியுடனா? இதோ, செலீனுக்குத் தெரேசாள் எழுதியகடிதத்தில் விடைகாணக் கிடக்கிறது.

**"நாம் அமைதியாகவேதனைப் படுவோமாக.** அமைதி என்னும் சொல் சற்று அழுத்தமானசொல்லாய் எனக்குப்பட்டது. ஆனால், அன்றொரு நாள் அதைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கும்போது, அமைதியில் துன்புறுவதின் இரகசியத்தைக் கண்டுணர்ந்தேன். அமைதியென்னும் சொல்லுக்கு மகிழ்ச்சியெனப் பொருளில்லை. உணரும் மகிழ்ச்சியை அது குறிப்பிடுகிறதில்லை. **அமைதியாக வேதனைப்படுவதற்குயேசுவிரும்புவதை நாமும் விரும்பினாலே போதும்."**

ஆகையால், நமக்குவரும் துன்பதுரிதங்கள்எல்லாம் கடவுளிடமிருந்து வரும் அன்பின் அடையாளங்களென ஏற்றுக்கொள்ள வேண்டும். அவைகள் வழியாக நாம் யேசுவை நாளுக்குநாள் ஒத்தவருவோம். இங்கே அவர்பால் வைத்த அன்பினால் எத்தனை துன்புறுகிறோமோ அத்தனை அங்கே பேரின்பம் மிகுதியாயிருக்கும். யேசு விரும்புவதை நாமும்விரும்பி ஏற்றுக் கொண்டாலே போதும்.

—※—

# கிறிஸ்து இராசாவும் அவரது இராச்சியமும்

கிறிஸ்துஇராசாவின் பிரசைகள்என்ற மட்டில் ஆண்டுதோறும் ஐப்பசிமாதத்தில் அவருடைய திருநாளைக் கத்தோலிக்கராகியநாம் வெகுசிறப்புடன் கொண்டாடுகிறோம். மனுமகன் இப்பூவுலகில் வரும்பொழுதே இராசரீகத்துடன் தோன்றவேண்டும்என்பது நித்தியபிதாவின் தீர்மானமாய் இருந்தது. சருவேசுரனால் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகள் பழையஏற்பாட்டின் பலஇடங்களில் கிறிஸ்துவின் இராசரீகத்தைப் பற்றி வெளிப்படையாகவும், விரிவாகவும், சிற்சிலசமயங்களில் வெகு குறிப்பாகவும் கூறியுள்ளனர். நரதேவனின் மனிதஅவதாரத்தை மரியாய்க்கு அறிவிக்கவந்த தேவதூதனே :

"அவர் உன்னதமானவருடைய
சுதன் எனப்படுவார்
ஆண்டவரான சருவேசுரன்
அவர் தந்தையாகிய தாவீதின்
சிங்காசனத்தை
அவருக்குத் தந்தருளுவார்
அவர் யாக்கோபின் கோத்திரத்தில்
என்றென்றைக்கும் அரசாளுவார்
அவருடைய இராச்சியத்திற்கோ
முடிவிராது"

எனக்கூறிக் கிறிஸ்துவின் இராசரீகத்தை அறிக்கையிட்டிருக்கிறார். திவ்விய பாலனை ஆராதிக்கவிரும்பிப் புறப்பட்டு வந்த மூவரசரும், "யூதருடைய இராசாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்றே ஏரோதனிடம் வினவினார்கள்.

ஆனால், அவர் எடுத்துக்கொண்ட தரித்திரகோலமும், அவருடைய சிலுவைமரணமுமே அநேகர் அவருடைய இராசரீகத்தை அங்கீகரிக்காதபடி செய்தன. எனினும், தமது திருப்பாடுகளும், அவமானமுள்ள மரணமுமே தமது இராசரீகத்தை நிலைநாட்டும் என்று காண்பிக்கவே "நான் பூமியில் நின்று உயர்த்தப்படுவேனாகில் எல்லாவற்றையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்" என்றார்.

ஆனால், அவருடைய இராச்சியம் இவ்வுலகிற்கு அடுத்ததல்ல. இதன் நிமித்தமே மக்கள் அவரைத் தங்கள் இராசாவாக்கத் தேடியபொழுது அவர் அவர்கள் மத்தியில்நின்று விலகிக் கொண்டார்.

"நீர் இராசாவோ?"எனப்பிலாத்து வினவியபொழுதும், "உள்ளபடி நீரே சொல்லுகிறீர். என் இராச்சியம் இவ்வுலகிற்கு அடுத்ததல்ல. என் இராச்சியம் இவ்வுலகிற்கு அடுத்ததாகில் என் சேவகர்கள் மெய்யாகவே போராடியிருப்பார்கள்" என்றார்.

அவருடைய இராச்சியம் இவ்வுலகிற்கு அடுத்ததல்ல. எனினும், அது இவ்வுலகத்திலும் உண்டு. மனிதரின் ஈடேற்றத்திற்காகப் பாடுபட்டு மரித்தபின் தமது திருப்பாடுகளின் பேறுபலன்கள் உலகம் முடியுமட்டும் மனிதரின் இரட்சணியத்திற்குப் பயன்படும் பொருட்டு, அவர் ஏற்படுத்திய திருச்சபையே பூவுலகில் கிறிஸ்துவின் இராச்சியமாகும். இவ்வுலக சீவியத்திற்கு அடுத்த லௌகீகசாதனங்கள் அனைத்தையும் மனிதன் கடவுளின் மகிமைக்காக உபயோகித்தால் அவருடைய இராச்சியம் வளரும்.

கிறிஸ்துநாதருடைய இராச்சியத்தின் பிரசையாக வேண்டுமென்பதற்காகவே மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான். அவரும் நம்முடைய இருதயத்தையே தமக்குத்தரும்படி கேட்கிறார். அதாவது நாம் நம்முடைய முழு ஆத்துமத்தோடும், முழுமனதோடும், நம் முழுச்சத்துவங்களோடும் தம்மை நேசிக்கவேண்டும்என்பதே கிறிஸ்து இராசாவின் பேராவலாகும்.

கிறிஸ்தவர்களாகியநாம் நமதுஇருதயத்தைமட்டும் அவருக்குக்கொடுப்பது போதாது. அவருடைய இராச்சியம் பரவும்படி சேவைபுரியவும் வேண்டும். வளர்பிறைபோல் வளர்ந்து நாற்புறமும் பரவிவரும் நாஸ்திகத்தை வேரறுத்துக் கிறிஸ்துவின் இராச்சியத்தை நிலைநாட்ட இயன்றதியாகங்கள் அனைத்தையும் செய்தல்வேண்டும். குடும்பங்களிலும், சமூகங்களிலும், அலுவலகங்களிலும், இராச்சியங்களிலும் கிறிஸ்துவ சீவியம் புத்துயிர்பெறும்படி — அமைதிக்குப் பங்கம்ஏற்படாதவகையில் ஏற்ற பணி புரிதல்வேண்டும்.

இதற்கு அச்சாணிபோன்று விளங்குவது குடும்பங்களில் திருஇருதய இராசாங்கத்தை ஏற்படுத்துதலாகும். யேசுவின் திருஇருதயப்படத்தை அல்லது சுரூபத்தை வீட்டின் முக்கியஇடத்தில் ஸ்தாபித்துக் குடும்பம்முழுவதையும் காணிக்கையாக்கும் திருச்சடங்கே "திருஇருதய இராசாங்க ஸ்தாபக"மாகும். கிறிஸ்தவர்கள் தங்கள் குடும்பங்களில் "கிறிஸ்துஇராசாவின் அரசாட்சியை"ப் பகிரங்கமாய் அங்கீகரிப்பதின்மூலமே அவரின் ஆளுகைக்குப் புறம்பாயுள்ள மக்களையும், நாடுகளையும் கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படுத்தமுடியும்.

யேசுவின் திருஇருதயப் படத்தை அல்லது சுரூபத்தை வீட்டில் ஆடம்பரமாய்க் கொலுவேற்றிவைத்தவுடன் நாம் கிறிஸ்துவின் அரசாட்சியை நமதுவீட்டில் ஏற்படுத்திவிட்டோம்எனக் கூறமுடியாது. இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் யேசுவின் திருஇருதயப் படத்திற்குமுன் தினமும் குடும்பத்தினர் ஒன்றுகூடிச்செபித்தல், நல்வாசகத்திற்கடுத்த புத்தகம், பத்திரிகைகளைத் தாம்வாங்கி வாசிப்பதுடன் மற்றவர்களுக்கும் கொடுத்துப் பரப்புதல், இயன்றமட்டும் திவ்வியபூசை கண்டு, திவ்வியநன்மை உட்கொள்ளுதல், இரா ஆராதனை, யேசுவின் திருஇருதயத்திற்குச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரம்செய்தல் முதலியவைகளே வீட்டில் நாம் அங்கீகரித்த கிறிஸ்துவின் அரசாட்சியைப் பூரணமாக்கி அதற்குரிய பலன்களையும் நமக்கு அளிக்கக்கூடிய சக்திவாய்ந்த ஆயுதங்களாகும்.

— மேரி ரேசலீன் சூசைப்பிள்ளை

## பிரிவினைச் சபைகளின் மாநாட்டில்

# கத்தோலிக்க பார்வையாளரும் கலந்துகொண்டனர்

கிழைத்தேச பிரிவினைச்சபைகளின் மாநாடு ஒன்று 'ரோட்ஸ்' என்றஇடத்தில் கடந்த புரட்டாசிமாதம் 24-ந் திகதியிலிருந்து இம்மாதம் 1-ந் திகதி வரை நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு உத்தியோகபூர்வமான கத்தோலிக்க பார்வையாளரும் அழைப்பின் பேரில் சமுகமளித்தனர். ரோமாபுரியில் அனுட்டான வேதசாஸ்திர நிலையத்தின் தலைவரான வண. பியர் டு மொண் சுவாமியார் கத்தோலிக்க பார்வையாளருள் ஒருவராகச் சென்றிருந்தார்.

8-ம் நூற்றாண்டின் பின் பிரிவினைச் சபைகள் முதல்முறையாக மாநாடு கூடியது இதுவேயாகும். இம்மாநாட்டில் விசுவாசம், அதிகாரம், திருவழிபாடு, துறவறசீவியம், குடும்பவாழ்க்கை, எதிரேவரும் வத்திக்கான்பொதுச் சங்கம், பிரிவினைச்சபைகளின் ஒற்றுமை விழைவு முதலிய விடயங்கள் ஆராயப்பட்டன. இம் மாநாட்டின் பயனாக வத்திக்கான் பொதுச்சங்கம் முடிவடைந்தபின் பிரிவினைச்சபைகள் சங்கங்கூடித் திருச்சபையின் ஒற்றுமைக்குரிய நடவடிக்கைகள் எடுப்பன என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி மாநாட்டின்போது, "அழைப்புவந்தாலும் எங்கள் சபை இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் போகவேபோகாது"என்று ருஷிய பிரிவினைச்சபையின் செயலாளரான பத்திறியாக்கு நிக்கோடிம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது: "ருஷிய பிரிவினைச்சபையின் கொள்கைக்குத் 'திருச்சபையில் பாப்புவுக்கு முதன்மையுண்டு' என்ற சத்தியம் முரண்பாடானது. ஆகவே, நாங்கள் பொதுச்சங்கத்திற்குச் செல்வதால் எப்பயனையும் அடையப்போவதில்லை."

ஆனால், இக்கூற்றை மற்றப் பிரிவினைச்சபைகள் விரும்பவில்லை. இது ருஷியஅரசைத் திருப்திசெய்வதற்காகவே கூறப்பட்ட கைக்கூலித்தனம் எனக் கண்டித்தன. கொப்டிக், கிறகோறியன், சிரியன் எத்தியோப்பியன் ஆகிய மற்றப் பிரிவினைச்சபைகள் ரோமன் திருச்சபையுடன் ஒற்றுமைகாண விழையும் சபைகள்.

—(✿)—

## குருஷேவ்வின் குறுக்குப்புத்தி

**"பாப்புவின் சமாதானவேண்டுகோளைஆர்வத்துடன்படித்தேன்; சர்வாதிகார நாடுகளின் போர் முரசைக் கேட்ட அனைத்துலகக் கத்தோலிக்கமக்கள் பீதிஅடைந்தனர். கத்தோலிக்க மக்களின் இவ்வுணர்வை மனதிலிருத்தியே பாப்பு தம் சமாதான வேண்டுகோளை விடுத்தார். பாப்பு தம் கூற்றில் அறிவுக்குக் கவனம் தந்தார். இதில் இறைவனுடைய நீதியின் பயத்திற்கு இடமேயில்லை"என்றார் திரு. குருஷேவ். விஷமத்தனம் மிகுந்த இவர் மேலும் கூறியது: "கத்தோலிக்கர்களாகிய ஜே. கென்னடி, சி. அடனேவர் முதலியோர் பாப்புவின் இப்பரிசுத்த எச்சரிக்கைக்குச் செவி மடுப்பார்களா?**

வத்திக்கான்தினத்தாள் 'ஒசேர்வாத்தோரே ரோமானோ' திரு. குருஷேவுக்குத் தகுந்தசூடு அளித்துள்ளது: 1. கத்தோலிக்கதிருச்சபையின் சமாதான அலுவலை ருஷியா அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டது இதுவே முதன்முறை. நாடுகளினிடையே கலகம் மூட்டுவதுதான் திருச்சபையின்வேலை எனும் ருஷிய பொய்க் குற்றச்சாட்டில் இது ஒரு மாறுதல்.

2. இறைவனை மறுக்கவும், இறைவனின் பராமரிப்பை இகழவும்கூடிய வார்த்தைகளுக்கு இங்கு இடமேயில்லை. பெரும் கருத்துவேற்றுமைகளைக் கொண்டுள்ள தலைவர்களிடையே ஒருவித ஒற்றுமை மனப்பான்மை ஏற்பட்டு, சமாதானத்தைப்பாதுகாக்கவே பாப்புவின் கூற்று அளிக்கப்பட்டது.

3. பாப்புவின் சமாதான வேண்டுகோள் கவனத்தோடுதான் எந்த ஒரு தனிச் சந்தர்ப்பத்தைமட்டும் குறிக்காதவாறு அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி, தங்கையரே!

இம்மாதம் 29-ம் நாள் ஞாயிறுவாரம் நம்மெல்லோருக்கும் ஒரு பெரிய திருநாள். நம் தெய்வீக அரசர்தினம். கிறிஸ்து அரசர்தினம். ஒருநாட்டின் அரசர்தினத்தை எவ்வளவு சிறப்பாகவும் ஆடம்பரமாகவும், கொண்டாடுவர் அந்நாட்டு மக்கள். மூவுலகுக்கும் அரசர். அரசர்க்கரசர் கிறிஸ்து அரசர்தினம் கிறிஸ்தவர்களுக்கு மகத்தானதினம். அதை நீங்களும் அதிக ஆடம்பரத்துடன் கொண்டாடவேண்டாமா? என்னவிதமான ஆடம்பரம் செய்யப்போகிறீர்கள்! அன்று திவ்விய பூசையில் பங்குபற்றி, தேவநற்கருணை அருந்தி, கிறிஸ்து தேவ அரசரை மனதாரவாழ்த்துங்கள். அத்துடன் கார்த்திகை மாதம் 5-ந் திகதி நம் பரிசுத்ததந்தை 23-ம் அருளப்ப பாப்பரசரின் மகுடாபிஷேகதினம் கொண்டாடப்படவிருக்கின்றது. அன்றுதினம் பாப்பரசருக்காக விசேஷமாய்ச் செபியுங்கள். அவருக்கு நல்ல சுகத்தையும், பலத்தையும் வல்லதேவன் அருளுமாறு மன்றாடுங்கள்.

அன்புள்ள அண்ணு.

சிறுகதை

## நம்பிக்கையின் அடைமானம்

அயர்லாந்து தேசத்தில் வேதகலாபனைக்காலமது. கத்தோலிக்கர் ஒருவரும் வெளியே தலைகாட்டமுடியாதநிலை. குருமாரும், மேற்றிராணிமாரும் தம் சமயக் கடமைகளைச் செய்யமுடியவில்லை. எங்கும் கத்தோலிக்கரைப்பற்றி உளவறிய வேவுகாரர் பரவிவிடப்பட்டனர். சமய ஆசாரங்கள், கோவில்கள் எல்லாம் தடைசெய்யப்பட்டன. கத்தோலிக்கர் படுகொலைசெய்யப்பட்டனர். அரசாங்க கட்டளைகளை மீறியவர்கள் சிரச்சேதம்செய்யப்பெற்றனர்.

அப்படியிருந்தபோதும், மறைமுகமாக மாறுவேடங்களில் குருமாரும், மேற்றிராணிமாரும் சிதறிக்கிடந்த தம் ஞானமந்தைகளுக்கு வேண்டிய ஆன்ம உதவிகளை இரகசியமாகச் செய்துவரத் தவறவில்லை.

ஒருநாள் ஒரு பிச்சைக்காரன் ஒரு வறிய குடிசையின்முன் வந்துநின்று பிச்சைகேட்டான். அக்குடிசையில் ஒரு வயதுசென்ற கிழவனும், 12 வயதுச் சிறுமியும் இருந்தனர். அச்சிறுமி குடிசையின் வெளியேவந்து அங்குநின்ற பிச்சைக்காரனுக்கு ஒரு துண்டு அப்பத்தைக் கொடுத்தபின் அழத்தொடங்கினாள். இதைக் கண்ட பிச்சைக்காரன் "ஏன் அம்மா அழுகிறாய்" என்று இரக்கத்துடன் கேட்டான். சிறுமி "எனது பேரனார் பாயும் படுக்கையுமாக இருக்கிறார். இன்றைக்கோ, நாளைக்கோ இறந்துவிடுவார் போலிருக்கு. உதவிக்கோ ஒருவருமில்லை" என்றாள். நான் உதவிக்கு வரட்டுமா என்று கேட்டான் அந்தப் பிச்சைக்காரன். "இல்லை அப்பா, ஒரு பிச்சைக்காரரையும் உள்ளேவர விடக்கூடாது என்று எனது பேரனார் கண்டிப்பாகக் கூறியிருக்கிறார்" என்று சொன்ன சிறுமி, சற்று யோசித்துவிட்டுப் பிச்சைக்காரனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

உள்ளேவந்த பிச்சைக்காரன் வயோதிபரான சிறுமியின் பேரனை அணுகி, தன்னை யாரென்று தெரிவித்து, வயோதிபரின் விருப்பப்படி கடைசித் தேவதிரவிய அனுமானங்களை அருளினார். அவர்தான் அயர்லாந்து தேசத்தின் தலைநகர மேற்றிராணியாரான மைக்கல் டேவிட் ஆண்டகையாவர்.

மேற்றிராணியார் கடைசித்தேவ திரவிய அனுமானங்களை அருளிய பின், வயோதிபர்: "ஆண்டவரே, நான் 20 வருடமாக எனது மரணச்சமயத்தில் ஒரு குருவானவரை எனக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்ற கருத்துடன் செபமாலை ஓதிவந்தேன். எனது மன்றாட்டு வீண்போகவில்லை" என்று கூறினார். மேற்றிராணியார்: "உமது நம்பிக்கையை நான் மெச்சுகிறேன்" என்று கூறி ஆசியருளிச் சென்றுவிட்டார். வயோதிபர் சிலநாட்களில் பாக்கியமான மரணமடைந்தார்.

நாமும் இக்கிழவரைப்போல் விடாப்பிடியான நம்பிக்கையுடனும், நல்ல கருத்துடனும் மன்றாடினால் அச்செபம் வீண்போகாது. தேவதாயாரைக்குறித்துச் செபமாலை ஓதும்பொழுது எமது சரீரநலன்களைவிட ஆத்துமகாரியங்களுக்காக மன்றாடிவருவோமானால் அச்செபங்கள் அதிகபயனளிக்கும் என்பது திண்ணம்.

எஸ். எம். ஜே.

> தம்பி, தங்கையரே!
>
> உங்களுக்குப் பிடித்தமான அர்ச்சியசிட்டர் யார்? ஏன் அவரைத் தெரிந்துகொண்டீர்கள் என்று 25 வரிகளுள் அடக்கி எழுதி அனுப்புங்கள், திறமானவற்றைத் தெரிந்து பிரசுரிப்போம்.
>
> அண்ணு.

நான்விரும்பும் அர்ச்சியசிட்டர்

## அர்ச். செசிலியா

அர்ச். செசிலி அம்மாள் றோமாபுரியில் வாழ்ந்தவள். அதிக சீரும் சிறப்பும் செல்வாக்குமான குடும்பத்தில் பிறந்தவள். விதம்விதமான ஆடை ஆபரணங்கள் அவளுக்கு அணிவதற்கிருந்தன. தித்திப்பான தீன்வகைகள், விரும்பியபடி உண்ண ஏராளமாய் அவளுக்கிருந்தன. ஆனால், அவள் அந்த ஆடம்பரங்களை முற்றாகவெறுத்தாள். நல்ல உடைகளை உடுத்தபோதும், உள்ளே கரடுமுரடான தோல், உரோம உடைகளை அணிந்து தபசுசெய்வாள். தனது உணவுகளை வறியவர்க்குக்கொடுப்பாள். தனது உயிரையும் கடவுளின் நேசத்துக்காகவே கொடுத்தாள் செசிலியா. அஞ்ஞான அரசன் அவளைச் சித்திரவதைசெய்து துன்புறுத்தினான். அவற்றைக்கண்டு அவள் மனம்மாறவில்லை. உறுதியான விசுவாசத்துடன் எல்லாவற்றையும் சகித்தாள். அவளது உயிரைவாங்குவதைவிட வேறொன்றையும் அவர்களால் செய்யமுடியவில்லை. அவளது சிரசைவெட்டி அவளைக் கொலைசெய்தனர். செசிலியம்மாள் சங்கீதத்தின் பாதுகாவலியாகத் திருச்சபையினால் கொண்டாடப்படுகிறாள்.

ச. மேரி யசிந்தா,
கரம்பன்.

## திருச்செபமாலை

அன்னைமரி யருள்மாலை
அருள்பெருக்கும் திருமாலை
வையகத்தோர் கரையேற
வழிகாட்டும் செபமாலை.

ஐம்பத்து மூன்றுமணி
அணிசெய்யும் மணிமாலை
நம்பிக்கை யூட்டுமொளி
நாயகியாள் மணிமாலை

தேவ்பரம ரகசியமும்
தேவன்சொன்ன திருச்செபமும்
சீடர்கள்தாம் செய்செபமும்
சேர்ந்தநல்ல செபமாலை.

தூதுவனர் வாழ்த்துரையின்
துங்கமணிச் செபமாலை
பூதலத்தில் நன்மைவளம்
பொழிந்தருளும் செபமாலை.

கன்னித்தாயின் களிஉவகை
கவலையொடு பாக்கியமும்
வண்ணமா யெடுத்துரைக்கும்
வல்லபங்கொள் செபமாலை.

லூர்த்துமலைக் குகையினிலும்
பாத்திமா பதியினிலும்
ஆர்த்தகுரல் கேட்டோத
அன்னைதந்த செபமாலை.

தனவி

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

### இலக்கம் M. B. 1812.

கந்தர்மடம், யாழ்ப்பாணம்
ஆறுமுகம் செல்லத்துரை
— வழக்காளி

எதிராக

அராலிவடக்கு, வட்டுக்கோட்டை
சின்னத்தம்பி தர்மலிங்கம்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1812-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணிகள் 1961-ம் வருடம் கார்த்திகைமாதம் 18-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4,143/. இதற்குத் தீர்வை 2,200/-உம், 30-8-57 தொடக்கம் 17-10-57 வரையும் 100-க்குப் 10 வீதவட்டியும், பின் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு 227 ரூபா 60 சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டைக் கோயிற்பற்று 'அராலி கிழக்கு 'கொட்டன்காடு' மேற்பரப்பு 6-உம் கிணற்றில் $\frac{2}{3}$ பங்கும், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—வண்ணை வயித்தீஸ்வரன் கோயில் ஆதனமும், விசுவநாதர் கைம்பெண் தையல்முத்துவுக்கும், பங்காளருக்குமுரிய ஆதனமும். வடக்கு — கதிரேசர் சிற்றம்பலத்துக்குரிய ஆதனம். மேற்கு — நாகநாதர்பெண் மாணிக்கத்துக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு—விசுவநாதர் முருகேசுவுக்கும், சகோதரருக்குமுரிய ஆதனம்.

2. மேற்படி அராலி கிழக்கு 'மைலியப்புல'மும், 'இடுகோத்து வய'லும் நெற்பரப்பு 25. எல்லை: கிழக்கு—கேணியும், வேள்ளியன் பெண் சின்னப்பிள்ளையின் ஆதனமும். வடக்கு—வேள்ளியன்பெண் சின்னப்பிள்ளைக்கும், ஆறுமுகம் கைம்பெண் முத்திக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு — வேலன் கந்தனின் ஆதனம். தெற்கு—சின்னத்தம்பி பெண் நன்னிக்கும், வேலன் கதிரவேலனுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம்.

3. மேற்படி அராலி வடக்குக் 'கோட்டையாவத்தை' நெற்பரப்பு 15. எல்லை: கிழக்கும், வடக்கும்—நன்னித்தம்பிபெண் அன்னம்மாவும், கார்த்திகேசர் தம்பாப்பிள்ளையும் மேற்கு — சபாபதி பெண் மீனாட்சிப்பிள்ளையும், சின்னத்தம்பி சிதம்பரநாதரும். தெற்கு — மாரியம்மன் கோயிலும், சபாபதி பெண் மீனாட்சிப்பிள்ளையும், சின்னத்தம்பி சிதம்பரநாதரும்.

4. மேற்படி அராலி வடக்கிலும், தெற்கிலும் 'கில்லக்காடு' நெற்பரப்பு 15. எல்லை: கிழக்கு—சின்னையா கைம்பெண் முத்தாச்சியும், கதிரவேலு நாகநாதரும். வடக்கு—முன்சொல்லப்பட்டமுத்தாச்சியும், அம்பலவாணர் பெண் நாகமுத்துவும், பங்காளரும், ஆறுமுகம் பெண் வள்ளியம்மையும். மேற்கு—கனகசபை சபாரத்தினம். தெற்கு—சபாபதிபெண் தங்கமுத்து.

5. மேற்படி அராலிதெற்குக் 'கில்லக்காடு' நெற்பரப்பு 4. எல்லை: கிழக்கு—நாகநாதர்பெண் மாணிக்கம். வடக்கு—சபாபதிபெண் தங்கம். மேற்கு—முத்துசாமி பெண் இராசம்மாவின் சந்ததியார். தெற்கு — முருகேசு கனகசபையின் சந்ததியார்.

6. மேற்படி அராலி வடக்குத் தாளைமடை 'புத்துவயல்' நிலப்பரப்பு $6\frac{1}{2}$. எல்லை: கிழக்கும், தெற்கும்—சின்னட்டி வெல்லியின் ஆதனம். வடக்கு — சின்னட்டியன் சின்னத்தம்பியின் ஆதனம். மேற்கு—குளம்.

விதானைவளவு, சித்தங்கேணி,
12—10—61

சி. செ. மாரிமுத்து,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

## இரு அப்போஸ்தலரின் தாயார்

செபதேயுவின் மனைவியாரும், பெரிய யாகப்பரினதும், சுவிசேஷக அருளப்பரினதும் தாயாருமான அர்ச். சலோமே அம்மாளின் திருநாள் ஐரோப்பாவில ஐப்பசிமாதம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு திருநாள்.

யேசுநாதரைப் பின்சென்ற யெருசலேம் நகரின் புண்ணிய ஸ்திரிகளில் இவளும் ஒருவள். கல்வாரிமலையிலே தேவதாயாருடன் சிலுவையடியில் நின்ற புண்ணிய ஸ்திரீகளில் ஒருவள். உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலே யேசுநாதருடைய திருச்சரீரத்துக்குப் பூசுவதற்கு வாசனைத் தைலங்கள் கொண்டுசென்றவர்களுள் இவளும் ஒருவள். யேசுநாதர் உயிர்த்தெழுந்த செய்தியை மரியமதலேனம்மாளால் முதலில் அறிவிக்கப்பட்டவர்களுள் அர்ச். சலோமேயும் ஒருவள்.

அர்ச். சலோமே பேராசைபிடித்த ஒருபெண். தனது இரண்டு பிள்ளைகளையும் உலகில் நல்லாய்வைக்கவேண்டும் என்ற ஆசையுடையவள். மற்ற யூதரைப்போல் கிறிஸ்துநாதருடைய இராச்சியத்தைப்பற்றித் தப்பாக எண்ணிக்கொண்டிருந்தாள். யேசுநாதர் இவ்வுலகில் ஓர் இராச்சியத்தை ஏற்படுத்துவாரென்றும் அதனால் மற்றப் பெண்களை முந்திக்கொண்டு, தனது இரு குமாரரையும் அழைத்துக் கொண்டு யேசுநாதரிடம்வந்து, அவருடைய இராச்சியத்தில் முதல் இரு இடங்களையும் கொடுக்கும்படி கேட்டாள். ஆண்டவரே, "உமது வலது பக்கத்தில் ஒருவனையும், இடது பக்கத்தில் ஒருவனையும் வைத்துக்கொள்ளும்" என்று மன்றாடினாள். அவளுடைய பேராசையை நன்கு அறிந்திருந்த யேசுநாதர், நேரடியாக அவளைக் கண்டிக்கவில்லை. மறைமுகமாக அவளுடைய குமாரருக்கே பேசினார். "நீங்கள் கேட்பது இன்னதென்று நீங்கள் அறியவில்லை. நான் பானம்பண்ணும் பாத்திரத்தில் நீங்கள் பானம்பண்ண உங்களுக்குச் சம்மதமா?" என்று அவர்களை யேசுநாதர் வினவினார்.

அர்ச். பெரிய யாகப்பருடன், அர்ச். சலோமே வீடுவாசல் எல்லாம் விட்டுவிட்டு ஸ்பானியாவுக்குப் போனாள் என்றும், சிலர் அவள் இத்தாலிக்குப் பயணமானாள் என்றும், சிலர் பிரான்ஸ் தேசத்துக்குப் பயணமானாள் என்றும் பாரம்பரைக்கதைகள் கூறுகின்றன. அர்ச். சலோமேயின் கோரிக்கை எதுவானாலும் இன்று அவள் யேசுவின் இராச்சியத்தில் இருக்கிறாள். அவளுடைய இருகுமாரரும் அவள் ஆசித்ததுபோலக் கிறிஸ்துவின் இராச்சியத்தில் மிகவும் மகிமையோடு இருக்கிறார்கள். யேசுநாதராலே இவ்வுலகில் அதிகமாக நேசிக்கப்பட்டவர் அர்ச். அருளப்பர். இன்னும் யேசுநாதர் சிலுவையில் மாணித்தபோது சிலுவையடியில்நின்றவர் அருளப்பர். யேசுநாதர் பிடிபட்டநேரமுதல் கடைசிவரை அவரோடு கூடஇருந்தவர் அருளப்பர். யேசுநாதர் மறுரூபமான போது அதற்குச் சாட்சியாய் இருந்தவர்களுள் அர்ச். சலோமேயின் குமாரரான இரு அப்போஸ்தலரும் இருந்தனர். மேலும் பூங்காவனத்தில் யேசுநாதர் மரண அவஸ்தைப்பட்டபோது தம்மோடுகூட அழைத்துக்கொண்டு போன மூவருள் இவர்கள் இருவரும் இருந்தனர். அர்ச். சலோமே அம்மாள் ஆசித்ததுபோல இருகுமாரரும் பாக்கியமான அந்தஸ்தைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் தாயார் எவ்வித பேறுபெற்றவள் என்று வாயால் கூறமுடியாது. அவள் ஆசித்ததுபோல் அவளுக்குக்கிடைத்தது. அவள் உண்மையாகவே பாக்கியவதி.

— காவலூர் யோபு.

—(⌒)—

## சிறுமலர் தெரேசாளும் வேதனையும்

துன்பம், துயரம், வேதனை, வருத்தம், வறுமை, சிறுமை இவை நம்மை எங்கும்சூழ்ந்து வருகின்றன. இன்பத்தையேநாடும் உலகமக்கள் துன்பத்தைக்கண்டு தூரஓடமுயல்கின்றனர். முடியாமையைக்கண்டு சோர்வுறுகின்றனர். தங்களையும், பிறரையும் சபிக்கின்றனர். இதனால் தங்களது சொற்ப வேதனையையும் பலமடங்கு பெரிதாக்கிக் கொள்ளுகின்றனர். கிறிஸ்தவனின் வேதனையை எந்தக்கோணத்திலிருந்து நோக்கவேண்டும் என்பது குழந்தை தெரேசாளின் கடிதங்களிலிருந்து புலனாகின்றது.

சிலுவைகள் ஒவ்வொருவருடைய அன்றாடவாழ்க்கையிலும் பலவடிவங்களில் தோன்றுகின்றன. தெரேசாள் ஒவ்வொரு சிலுவையையும் ஒரு தனிநிகழ்ச்சியாகக் கருதவில்லை. நம் அன்புத்தந்தை உலகம்உண்டாவதற்கு முன்னமே தயாரித்து, குறிப்பிட்ட காலத்தில் அனுப்பும் நன்கொடைகளாக— அன்பின் அடையாளங்களாக அவைகளைக் கருதினாள்.

தெரேசாள் மடத்தில் சேர்வதற்கு முன் பதினைந்துவயதில் மடத்திலிருந்த பவுலீன் அக்காளுக்கு எழுதினதாவது: "நான் கார்மேல்மடத்தில் சேர்ந்தவுடன் அங்கு நான்விரும்புவது ஒன்றே ஒன்றுதான். அதுதான் யேசுவுக்காக எப்போதும் வேதனைப்படுவது. எத்துணையுமில்லாமல் சாதாரண மணிமுடியை அடைவதைவிட, துன்பத்துடன் ஓர் உயர்ந்த மணிமுடிபெறுவது மேல். வேதனைப்படுவதால் ஒருவன் நல்லகடவுளை முடிவில்லாக் காலமும் மேலானமுறையில் நேசிக்கலாம்; ஆன்மாக்களை மீட்கலாம். ஆ! பவுலீன்! நான் சாகும்வேளையில் யேசுவுக்கு ஓர்ஆன்மாவைக் கொடுக்கக்கூடுமானால், எத்துணை மகிழ்வுறுவேன்! ஓர் ஆன்மா நரகநெருப்பிலிருந்து பறிக்கப்படும்; கடவுளை முடிவில்லாக்காலமும் துதித்துக்கொண்டிருக்கும்."

கிறிஸ்தவன் துன்பத்தை ஏற்றுக்கொள்வதற்கான இரண்டுகாரணங்களையும் தெரேசாள் எடுத்துரைக்கிறாள் — யேசுவுக்காகவும், ஆன்மாக்களுக்காகவும். இந்தக் குறுகிய வாழ்நாளில் நாம் யேசுவுக்காகத் துன்பப்படுவோமானால், மோட்சத்தில் எக்காலமும் உயர்[illegible]

மேலும் யேசுவோடு துன்பப்படுவதால் கிறிஸ்துவின் ஆன்மமீட்பில் நாம் ஈடுபடுகிறோம்.

தெரேசாள் மடத்தில் சேர்ந்தபின் செலீன் அக்காளுக்குப் பலகடிதங்கள் எழுதினாள். செலீனும் மடத்தில்சேர விரும்பினபோதிலும், வயோதிக தந்தை மார்ட்டினை அவள் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அவர் இறந்தபின் செலீனும் அதே கார்மேல்மடத்தில் சேர்ந்துகொண்டாள்.

மார்ட்டின் என்பவருக்கு ஒருவித வாதம்கண்டு, புத்தித்தடுமாற்றமும் ஏற்பட்டது. அவருடையமக்கள் இதைக் கேள்வியுற்று மிகவும் வருந்தினார்கள். அருகிலிருந்து கவனித்துவந்த செலீன் சொல்லொணாத் துயரடைந்தாள். அந்தவாய்ப்பில் தெரேசாள் எழுதிய கடிதமாவது:

"ஆம், யேசு தமதுசிலுவையோடு அங்கு இருக்கிறார். நீ அவரது அன்பின் தனிச்சலுகையைப் பெற்றிருக்கிறாய். அவர் உன்னைத் தம்மைப்போலாக்குவார். அவரது சிலுவையைத் தாங்கக்கூடவில்லை என்னும் நினைவு உன்னை ஏன் அச்சுறுத்தவேண்டும்? கல்வாரிக்குப் போகும்வழியில் யேசுவே மும்முறை குப்புறவிழுந்தார். பாவம், நீ அவரைப்போல் இருக்கமுடியாதா? ......உன்னை இவ்வாறு சோதிப்பதற்குக் கடவுள் உன்னை மிகச்சிறந்த அன்பால் நேசித்திருக்கவேண்டும். மிகுதியாய் நேசிக்கிறவர்களுக்கு அவர் மிகுதியாக வேதனையைத் தருகிறார்; கொஞ்சமாய் நேசிக்கிறவர்களுக்குக் கொஞ்சமாய்த் தருகிறார்."

நாம் எல்லாக்காரியங்களிலும் கிறிஸ்துவை ஒத்திருக்கவேண்டியவர்கள். ஆதலால், கிறிஸ்தவன்என்றாலே கிறிஸ்துவின் சிலுவையும் கூட இருக்கும். நாம் நமதுசிலுவைகளை மகிழ்வுடன் தாங்கிச் செல்ல வலிமையற்றவர்களாய் இருக்கிறோமேஎனக் கவலைகொள்ளத் தேவையில்லை. நமது ஆண்டவரே தமதுசிலுவையைச் சுமக்கமுடியாது விழுந்தார். ஆனால், உடனே எழுந்தார்.

தகப்பனுடையநிலை மோசமாகி, அவரை மருத்துவநிலையத்துக்குக் கொண்டு போனபோது, தெரேசாள் தன் அக்காள் செலீனுக்கு எழுதியகடிதம்:

ஆ! அருமை அக்காள், யேசுநமக்கு அனுப்பும் சிலுவையைப்பற்றி முறையிடுவதற்குமாறாக, அவர் இவ்வாறு நம்மைநடத்தும் அவரது அளவற்ற அன்பின் ஆழத்தை நான் அறியக்கூடவில்லை. நமது அன்புள்ளதகப்பன் இவ்வாறு வேதனைப்படுவதற்கு மெய்யாகவே யேசுவால் நேசிக்கப்படவேண்டும்.

வாழ்க்கை ஒருகனவு. விரைவில் நாம் விழிப்போம். அப்போது நமது மகிழ்ச்சி ...... துன்பங்கள் எத்துணை மிகுதியோ அத்துணைக்கு நமதுமகிமை மட்டில்லாததாயிருக்கும். யேசுநமக்கு அனுப்பும் சோதனையை நாம் வீணாக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்).

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3117**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், நல்லூர்
சின்னத்தம்பி கைம்பெண் சிதம்பரம்
— வழக்காளி.

எதிராக
சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு
1. ஆறுமுகம் முத்துவேலுவும்
2. மனைவி செல்லம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3117-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம்ஆண்டு நவம்பர்மீ 25-ந்உ (25-11-61) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,462-உம், மேலும் ரூபா 1,000-க்கு 27-10-1959 திகதி தொடக்கம், 24-2-1960 திகதிவரைக்கும் வருடமொன்றுக்கு 9%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வட்டியும, கோட்டுச்செலவு 194ரூபா 45சதமும்.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண்டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி கோப்பாய் கோயிற்பற்று, இருபாலைஇறை "ஆண்டிராசாவின் தோப்பு" நிலப்பரப்பு ஆறும் (6), வீடும், பயிர்களும், வடக்கெல்லைக்காணியின் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் கிணற்றுப்பங்கும், அதற்குரிய வழிவாய்க்காலும். இதற்கு எல்லை: கிழக்கு— கந்தையா இளையதம்பியின் ஆதனம். வடக்கு — ஆறுமுகம் சபாபதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு — வேலன் சின்னையனுக்கும், மற்றவர்களுக்கும் உரியஆதனம். தெற்கு — தம்பிப்பிள்ளை ஐயாத்துரைக்குரிய ஆதனமும், ஒழுங்கையும். இது முழுவதும். பதிவுஇல. K 118/44.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
[illegible] 10-10-61

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3749**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

காங்கேசன்துறை
இராமலிங்கம் கைம்பெண் காமாட்சி
— வழக்காளி.

எதிராக
காங்கேசன்துறை
1. பொன்னுச்சாமி இரத்தினசாமியும்
ஷெ ஊர்
2. பெண் இரத்தினமும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3749-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1961-ம்ஆண்டு கார்த்திகைமீ 25ந்உ சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,752-உம், ரூபா 1,750-க்கு 21-11-60 தொடக்கம், 27-4-61 வரையும் 9வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 202ரூபா 65சதமும்.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளை கோயிற்பற்று, பனையிறை "மூத்தானடைப்பும், ஆனந்தபிள்ளையார் வளவும்" பதினெந்துகுளி (குளி15). கடைக்கட்டடங்களும், குசினியும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு— விசுவாசம் பெண் அன்னம்மாவிற்குரிய ஆதனமும், ஒழுங்கையும், மடமும். வடக்கு— மடமும், ஆறுமுகம் கதிரிப்பிள்ளைக்குரிய ஆதனமும். மேற்கு— ஆறுமுகம் கதிரிப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு— ஆனந்தப்பிள்ளையார் கோவிலிற்குரிய ஆதனம். இதடங்கலும். இதன்பதிவு H265/192.

வை. ஏரம்பமூர்த்தி,
கோம்மிஷனர்.

காரைநகர்,
1961-ம்ஆண்டு ஐப்பசிமீ 18-ந்திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## ஒற்றுமைக்கும் ருஷியாவுக்கும் லூர்து திருயாத்திரை

பதினொருவிமானங்களில் 500 யாத்திரிகர்கள் லண்டனிலிருந்து லூர்துநகருக்குப் பறந்தனர். கிறிஸ்துவ ஒற்றுமைக்காகவும், ருஷிய மனந்திரும்புதலுக்காகவும் அன்னையிடம் மன்ருடச் சென்றனர் இவர்கள். அருட்பெருந்தகை தேயாஸ்ஆண்டகை இவர்களுக்காகத் திருப்பலி நிறைவேற்றினர். அன்றைய இரவைச் செபத்திலும், சிலுவைப்பாதையிலும் செலவழித்தனர்.

## மேற்றிராணியார் திரும்பிவந்தார்

ஹாங்கோவிலே கிவு மாகாணத்தில் மனியேமாப்பகுதியில் நிலைமை திருப்திகரமாக மாறியிருக்கின்றபடியால், கசங்கோ மேற்றிராணியார் கிளெயர் ஆண்டகை தமது மேற்றிராசனத்துக்குத் திரும்பியிருக்கிருர்.

சென்ற மாசியில் கன்னியாஸ்திரிமாருட்பட 40மிஷனரிமார் கசங்கோவில் லுமும்பாவின் கட்சிக்காரரால் கைதிகளாக்கப்பட்டு, அடி, அவமானத்துக்குள்ளாயினர். ஒருமாதத்தின்பின் 30 மிஷனரிமார் மேலும் துன்புறுத்தப்பட்டனர். கிவுமாகாண உத்தியோகஸ்தர்ஒருவர் பிணைப்பணங் கொடுத்து மீட்டபடியால் மரண தண்டனையிலிருந்து தப்பினர்.

## கடைசி மடமும் இப்பொழுது காலியாகிவிட்டது

சுலோவாக்கியாவில் றுசோம்பேரோக்கில் 80வயதினரான பிரான்சிஸ்கு சபைச் சந்நியாசர் இருவர் இறந்துவிட்டபடியால் இந்நாட்டிலிருந்த ஒரேயொரு சந்நியாசமடமும் வெறுமையாய்க் கிடக்கின்றது. 1949-ம் ஆண்டில் சந்நியாச மடங்களெல்லாம் பறிமுதல் ஆக்கப்பட்டு, துறவிகள்யாவரும் கலைக்கப்பட்டனர். றுசோம்பேரோக் மடம் வயோதிபருக்கும், நோயாளருக்குமாக விடப்பட்டிருந்தது. சென்ற ஆண்டில் இங்கு 30 வயோதிக சந்நியாசர் வசித்ததாகக் கூறப்படுகின்றது.

## நாலுக்கு ஒரு கத்தோலிக்க சேவையாளர்

பிறநாடுகளிலே மத சேவை புரியும் அமெரிக்கப் புரொட்டஸ்தாந்தர் 28,000 பேர். அத்தகைய சேவை செய்யும் அமெரிக்க கத்தோலிக்கர் 7,000 பேர்மாத்திரம் உளர் எனப் புல்ரன்ஷீன் ஆண்டகை குறிப்பிட்டார்.

பிறர் துன்பப்படும்போது கத்தோலிக்கராகிய நாம் சுகமனுபவிப்பவர்களாயிருப்போமா? வேதவிருத்திக்கு அதிக ஆளுதவியும், பண உதவியும் செய்யவேண்டும். எமது சகோதரர் வேதவிருத்திக்காக அந்நிய நாடுகளில் இரத்தவெயர்வை சிந்தி உழைக்கின்றபடியால் நாம் கூடிய அளவு அதிகபணம் அவர்கள் உதவிக்காகப் பிடித்துவைக்க வேண்டும்.

## தந்தையின் அன்புப்பரிசு

பெர்த்ரம் பீக் எனும் பதித குரவர் ஒருவர் சிறையினின்று விடுதலை பெற்றவர்களுக்கென ஒரு விடுதியை நடத்திவருகின்ருர். இதில் கத்தோலிக்கரும, கத்தோலிக்கர் அல்லாதவரும் பலர் உளர். திரு. பீக் கத்தோலிக்கஉணர்வு நிறைந்தவர். தம்விடுதிக்குப் பரிசுத்த தந்தையின் ஆசீரைவேண்டி விண்ணப்பித்திருந்தார். தந்தையும் அவ்விண்ணப்பத்தை ஏற்று, ஆசீர் அளித்து, அதோடு தம்மால் மந்திரிக்கப்பட்ட ஒரு சிலுவையையும் அனுப்பியுள்ளார்.

## குற்றப்பெருக்கைத் தடுக்கப் பாப்புவின் உதவி கோரினர்

தமது கோடைகால மாளிகையில் அருளப்ப பாப்பரசர் நியூயோக்கிற்குச் சேர்ந்த நீதிபதி சாமுவேல்லைபோவிற்ஸ் அவர்களுக்குத் தனிப்பேட்டி அளித்தபோது ஐக்கியஅமெரிக்காவில் இளைஞரிடையே பெருகிவரும் குற்றங்களைக் குறைக்கும் வழிவகைகளைப்பற்றிப் பேசிக்கொண்டனர்.

"நாம் யாது செய்வதுஎன அறியாமற் திகைக்கிறோம். உலகத்திற் சிறந்த மதத்தின் தலைவர் என்ற முறையில் பாப்புவிடம் காட்டுத்தீ போன்ற இப்பிரச்சினையைத் தீர்க்கும் வழிவகையைப்பற்றி ஆலோசனை கேட்டேன். வாழ்க்கைத்தரம் உயர்ந்த அமெரிக்க நாட்டில் இளங் குற்றவாளிகளின் தொகையும் உயர்ந்துகொண்டே வருகிறது. காரணம் என்ன? செல்வம் பெருக மக்கள்பண்பும் குறைவது மெய்யோ?" என்று அவர் கூறியுள்ளார்.

## இல்லறத்தார் நடாத்தும் தியான நிலையம்

இல்லறத்தார் ஆரம்பித்து நடத்திவரும் தியானகூடத்தைப்பற்றி அறிந்திருக்கிறீர்களா? பிலடெல்பியாவிலிருந்து 15 மைலுக்கு அப்பாலுள்ளதும், அர்ச். சூசையப்பர் குன்று என அழைக்கப்படுவதுமான ஞானவொடுக்க நிலயத்தில் 4 வங்களாக்களும், 2 சிற்ருலயங்களும் 200 ஏக்கர் காணியில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு வார இறுதியிலும் 300 பேர் ஞான ஒடுக்கத்துக்குச் செல்வர். மற்றைய நாட்களில் குருமார் ஞானவொடுக்கம் செய்ய வசதியுண்டு. 1921-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலயம் 4 லட்சம் டொலர் செலவில் அமைக்கப்பட்டது. இப்பணம்முழுவதும் கொடுத்தாகிவிட்டது. இங்கு சமையற் பகுதியைக் கன்னியாஸ்திரிமார் கண்காணித்து வருகின்றனர்.

அர்ச். சூசையப்பர் ஞானவொடுக்க நிலயத்துக்குச் செல்லுகின்றவர்கள் கட்டணம் எதுவும் கொடுப்பதில்லை. ஆயினும், அவர்கள் கொடுக்க விரும்பியது ஏற்றுக்கொள்ளப்படும். வார இறுதி ஞானவொடுக்கம் நடக்கும்பொழுது பல இல்லறத்தவர் வேதனமின்றிப் பணிபுரிகின்றனர்.

## சுவீடனுக்கு ஒரு நியூமன் தேவை

"நூறு ஆண்டுகளுக்கு முன்பு கருதினல் நியூமனின்நாட்களில் இங்கிலாந்து எந்நிலையில் இருந்ததோ, அந்நிலையில் இன்று உள்ளது சுவீடன்; ஒரு நியூமன்தான் தேவை" என்ருர் ஸ்டாக்கோம் மேற்றிராசனத்தின் விக்கார் ஜெனறலான ஒஸ்வல்ட் ஈவ்ஸ் சுவாமிகள். அநேக பதித சகோதரர் கத்தோலிக்க விசுவாசத்தைத் தழுவுகின்றனர். ஆண்டிற்கு ஏறத்தாழ 100 பேர் மனந்திரும்புகின்றனர். எண்ணிக்கை குறைவாக இருப்பினும் இவர்களுள் அநேகர் படித்தமேதைகள், லூத்தரன் சபைக் குருக்கள், 17–18 வயது வாலிபர்கள். சுவீடன் மக்கள் இறைவனை அகற்றிய இயற்கையை இவ்வளவு காலமாகப் போற்றிவந்தனர். ஆனல், இன்று அவர்களின் உள்ளம் உண்மையை அளிக்கும் ஒரு அதிகாரத்தைத் தேடி அலைகின்றது. இயற்கையை நாடினர்; இதயநிறைவை இழந்தனர். ஆகவே, அநேகாநேக தற்கொலைகள். இன்று உண்மையில் இதயநிறைவைப் பெற ஏங்கிநிற்கின்றனர். திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு இது ஒருசிறந்த வாய்ப்பு.

## சிலுவையை அழிக்க முயன்றவன் மாண்டான்

கிழக்கு ஜேர்மனியில் ஹெபல்பர்க் என்றஇடத்தில் மலைமீது நாட்டப்பெற்றிருந்த ஒரு சிலுவையை அழிக்கச் செங்கொடிப் போர்வீரர்கள் சிலர் முனைந்து, அம்மலையின் உச்சியை அடைந்து சிலுவையை அழிக்க முயல்கையில், ஒருவன் தவறி விழுந்து மாண்டான். இதைக்கண்ட பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் ஆலய மணியை அடித்து, மக்களை அழைத்தனர். உடனே போர்வீரர்கள் தங்கள் 'ஜீப்'காரில் ஏறிப் பறந்தனர். ஆனல், வேகமாகச் சென்றதால் ஒரு திருப்பத்தில் கார் தலைகவிழ்ந்தது. அநேகர்மாண்டனர். தவறை உணர்ந்த ஒரு ருஷிய அதிகாரி இக்கயமைச்செயலுக்காக மன்னிப்புக் கோரினர்.

## ஒக்ஸ்போட்டில் அனைத்துலக விவிலிய மாநாடு

இம்மாநாட்டிற்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் கிறிஸ்துவ விவிலிய வல்லுனர்கள் நூற்றுக்கணக்கில் வந்து கூடினர். கத்தோலிக்க, அங்கிளிக்கன், லூத்தரன், மற்றும் ஏனைய சபைகளைச் சேர்ந்த இவர்கள் புது ஏற்பாட்டைப் பற்றி விவாதிக்க ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் சந்தித்தனர். அவ்வேளை பேசியவர்களில் சிறப்பாகக்குறிப்பிடத் தக்கவர்கள்: அங்கிளிக்கன் அதிமேற்றிராணிஆண்டகை ராம்சே, யேசுசபை அருட்திரு. ஜோண் தானியேல்சுவாமிகள், ஆசீர்வாதப்பர்சபை மடாதிபதி கிறிஸ்தோப்பர் பட்லர். இவ்விரு கத்தோலிக்கரும் பேசியவுடன் அவர்கள் கருத்தைக் காகோஷம் செய்து வரவேற்றனர் பதித சகோதரர்கள். தானியேல்சுவாமிகள் 'மூன்குறிகளை'ப்பற்றியும், பட்லர் சுவாமிகள் 'திருச்சபை தேவையே' என்பது பற்றியும் உரையாற்றினர். விவாதிக்கப்பட்ட மற்ற விடயங்கள்: தோமையாரின் சுவிசேஷம், விவிலியத்தின் புதிய அங்கிளிக்கன் மொழிபெயர்ப்பு, இன்றைய வாலிபருக்குப் புதிய ஏற்பாட்டைப் போதிக்கும் முறை என்பன.

## ஜேர்மனியின் ஒற்றுமைக்காக

மியூனிக்நகரின் புதிய அதிமேற்றிராணியார் மே. த. கருதினல் டெவ்னர் ஆண்டகை சென்ற புரட்டாசித்திங்கள் 29-ம் நாள் அதிகாரபூர்வமாக ஆட்சிப்பீடம் ஏறினர். இவ்வின்ப வைபவத்தை நடத்திவைத்தவர் ஜேர்மனியிலுள்ள பாப்புவின் பிரதிநிதி பேரருட்பெருந்தகை பபீலே ஆண்டகை. பவேரியாவிலுள்ள எல்லா ஆலயங்களிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் ஜேர்மனியின் ஒற்றுமைக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்தல் வேண்டும் எனப் புதிய ஆண்டகை பணித்துள்ளார். இத்திருப்பலியைத் தாமே அன்றுமாலை நிறைவேற்றி ஒப்புக்கொடுத்தார்.

## பொதுவுடைமைத் தாக்குதலைத் தாங்கும் ஓர் அரண்

வட வியெற்னும் எல்லையிலிருந்து ஒரு கல்லெறிதூரத்திலிருந்த பொழுதிலும், தென்வியெற்னுமிலுள்ள லவாங் மாதா திருசேத்திரம் கத்தோலிக்கரின் பக்திக்கு மையமாகவே இருந்துவருகிறது. இவ்வாலயம் அண்மையில் அபிஷேகம் செய்யப்பெற்றபொழுது 2,00,000 மக்கள் சமுகமளித்தனர்.

இவ்வாலயம் வியெற்னுமின் சரித்திரத்தில் கலாபனையின் மத்தியில் நம்பிக்கை தரும் சின்னமாய் இருந்துவருகிறது. இந்நாட்டில் 1789-ம் ஆண்டில் கொடுமையானதோர் வேதகலாபனை தொடங்கினபொழுது வியெற்னும் கத்தோலிக்கர் தலைப்பட்டணமான கியுவுக்கு வடதெற்கேயுள்ள அடர்ந்தகாட்டில் அடைக்கலம்புகுந்தனர். விடுதலை கோரித் தேவஅன்னையை அல்லும்பகலும் வேண்டிவந்தனர். தேவதாயார் அவர்களுக்குத் தரிசனமளித்து, அவர்களைக் காப்பாற்றுவதாக உறுதிகூறி, அவ்விடத்தை வேண்டுதலுக்கும், பாதுகாவலுக்குமுரிய தலமாகக் குறித்தருளினர்.

## லூத்தரன் சபையினர் ஒத்துழைப்பர்

விசுவாசசத்தியங்களைப்பற்றிய பிரச்சினை எழாதவிடயங்களில் ஒத்தமுயற்சி தேடுமாறு போலாந்தில் லூத்தரன் சபைக் குருமார் கத்தோலிக்கருடன் ஆராய்ச்சி நடத்துகின்றனர்.

இச்சமாச்சாரத்தைக் கத்தோலிக்க பத்திரிகை ஒன்று வெளியிட்டு, பாப்பாண்டவர் பலமுறையும் கிறீஸ்தவ ஒற்றுமைபற்றிக் கூறியிருப்பது கடவுளின் அழைப்பென்றே கொள்ளவேண்டுமென லூத்தரன் சபைப் பிரதிநிதி சிக்மன்ட் மிக்கேலிஸ் அத்தியட்சகர் கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## செபமாலைப் படையும் அவுஸ்திரியாவும்

அவுஸ்திரிய மக்களில் பத்து விகிதத்தினர், அதாவது 6,50,000 பேர் செபமாலைத் தபப்படையில் சேர்ந்து, செபமாலையில் ஒரு பாகமாவது நாள்தோறும் செபிப்பதாக வாக்களித்திருக்கின்றனர்.

இப்படையை இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின் பிரான்சீஸ்கு சபைக்குரவர் பெத்துருஸ் ஹவ்லிசெக், பாத்திமா வேண்டுகோளின் பதிலாக ஆரம்பித்தார். உலக சமாதானமும், ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் மக்களின் விடுதலையும் இப்படையின் முக்கிய நோக்கங்களாகும்.

## இன்பத் திருச்சபையா?

அருட் பெருந்தகை புல்ரன் ஷீன் ஆண்டகை அமெரிக்க மக்களுக்குப் பின்வரும் அறிவுரை கூறியுள்ளார்: "துன்பத் திருச்சபையைச் சேர்ந்த மக்கள் நாம். ஆகவே, உலகின் பல்வேறு பாகங்களில் துன்புறும் கத்தோலிக்க மக்களின் துன்பத்தில் நாம் பங்கெடுத்தல் வேண்டும். மற்றவர்கள் யாவரும் துன்பத் திருச்சபையாக இருக்கையில், நாம்மட்டும் இன்பத் திருச்சபையாக இருக்கலாமா? வேதபோதகத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சபைகள் ஆள் உதவியும், பொருள் உதவியும் தருவதில் தாராளமாக இருக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டுள்ளார் ஆண்டகையவர்கள்.


விற்பனைக்கு

திருச்சடங்குக் கோவை

பிரதி விலை: 3-50

கிடைக்குமிடம்:

அதிபர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday October 28-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org